
# சாம்பல் பறவைகள்



## எல்.அரசரெத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பல் பறவைகள்

எஸ்.அரசரெத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சாம்பல் பறவைகள் : குறு நாவல்
- ஆசிரியர் : எஸ்.அரசரெத்தினம்
'ராஜ்பதி'
இல. 32, வி.வி. றோட்,
கல்முனை -02,
இலங்கை.
+94672229588, +94771992392
மின்னஞ்சல் : kalmunayaras@gamil.com.
- வெளியீடு : சத்யா பப்ளிகேஷன்ஸ், கல்முனை
- கணனி வடிவமைப்பு : பிறிலியன்ட் கொம்புயூட்டர் லேண்ட் கல்முனை.
- அட்டை வடிவமைப்பு : ஓவியர் எஸ்.ருத்ரா
- அச்சுப் பதிப்பு : கௌரி அச்சகம், கொழும்பு- 13.
- முதல் பதிப்பு : ஓகஸ்ட் 2010
- பிரதிகள் : 1000

- **Sambal Paravaikal : Tamil Novel**
- **Author : S.Arasaratnam**
**'Rajpathy', V.V. Road,**
**Kalmunai -02,**
**Sri Lanka.**
**+94672229588, +94771992392**
**E-mail :** kalmunayaras@gamil.com.
- **Publisheby : Sathya Publications, Kalmunai.**
- **Typesetting : Brilliant Computer Land, Kalmunai.**
- **Cover Designed : S.Rudra**
- **Printed at : Gowriy Printers, Colomb -13.**
- **First Edition : August 2010**
- **Copies : 1000**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னதமானவர்கள் வீழ்ந்துவிட்டனர்....
ஆளரவமற்ற இருட் புலத்தில்
அவர்கள் புதைக்கப் பட்டனர்...
யாரும் கண்ணீர் சிந்தவில்லை...
யாரோ அவர்களைக்
கல்லறைக்கு எடுத்துச் சென்றனர்....
அவர்தம்
புகழ் வாய்ந்த பெயர் கூறிட
அங்கே சிலுவையோ
சமாதியோ, மண்டபமோ
ஏதுமில்லை....
புல் முளைத்திருக்கிறது அங்கே...
தாழ்ந்திருக்கும் புல்லிதழ் ஒன்று
அந்த இரகசியத்தைத் தாங்கியிருக்கிறது...
கரைமீறிச் சீறியடிக்கும்
அலைகள் மட்டுமே சாட்சியம்...
வல்லமை வாய்ந்த
அவ்வலைகள் கூட
தொலை தூர இல்லத்துக்கு
செய்தியைக் கொண்டு போக முடியாது....

அதனால்

**இது**

***அவர்களுக்காக.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆசிரியரின் ஏனைய நூல்கள்.......*

- **வளமான வாழ்வைத்தேடி...**
- **விழிகளால் கதைகள் பேசி...**
- **இலங்கை அரசியல் வரலாறும் 12ஆவது பொதுத்தேர்தலும்...**
- **இலங்கை பாராளுமன்ற வரலாறும் 13ஆவது பொதுத் தேர்தலும்...**

*இலங்கையில் கிடைக்கும் இடம்.*
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
**செட்டியார் தெரு,**
**கொழும்பு -11.**

இலங்கையில் விலை ரூபா 200.00
வெளிநாடுகளில் U.S $ 10

இந்த நாவலில் குறிப்பிடப்படும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் நூலாசிரியரின் கற்பனையே.
இறந்தவர்கள் இருப்பவர்கள் எவரையும் குறிப்பிடுவனவல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மானிட வரலாற்றில் பல்வேறு முரண்நிலைப்பட்ட காலகட்டங்கள் நிலவியமையை நாம் கண்டுகொள்ள முடியும். அந்தவகையில் கைத்தொழிற் புரட்சியை அடுத்து, நிலமானியச் சமூக அமைப்பு மெல்ல மெல்லச் சரியத்தொடங்கின. (அதன் எச்சசொச்சங்கள் இன்றும் மீதமாக இருப்பதும் அதன் பண்பாட்டு, கலாசாரத் தாக்கங்கள் எம்மைத் தம் கட்டுக்குள் வைத்துச் சிப்பிலியாட்டுவதையும் நாம் உணர்ந்தும் உணராமலும் அல்லல்பட்டுக் கொண்டிருக் கின்றோம். இது ஒருவகையில் பேய்பிடித்தவரின் பரிதாபநிலை போன்றதே.) அந்த இடத்திற்கு முதலாளித்துவம் தமது மூலதனப் பெருக்கத்துடன் இரும்புப்பிடியை இறுக்கிக் கொண்டன. முதலாளித்துவத்தின் அடுத்தகட்டமாக ஏகாதிபத்தியம் வளர்ச்சியடைந்தது. அதன்பேறாக கொழுத்துப் பருத்த சுறாவைப்போல ஏகாதிபத்திய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளைத் தம் கட்டுக்குள்வைத்து, மேலும் மேலும் சுரண்டித் தம்மை அசைக்க முடியாத அரக்கர்களாக வளர்த்துக் கொண்டன. ஆனால் அடக்கிச் சுரண்டப்பட்ட நாடுகள் கிளர்ந்தெழுந்ததன் விளைவாக அவற்றுக்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானபோது, தமது சுரண்டலை நேரடியாக இல்லாமல் கண்ணுக்குப் புலப்படாத வடிவங்களில் கட்டமைத்தன. அதுவே காலனித்துவமும். ஏகாதிபத்தியமும் கருக்கட்டிய நவகாலனித்துவத்தினைத் தொடர்ந்து நீடிப்பதற்கான பல 'வைரஸ்கள்' அப்பப்போது உலாவ விடத்தொடங்கின. அதில் ஒன்றுதான் தேசிய இனப்பிரச்சினையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டில் வாழும் மக்கள் பல் மொழி, மதம், கலாசாரம், பண்பாடு என்பவற்றினைப் பின்பற்றிய போதிலும் அந்நாட்டின் பௌதீக சூழலுக்கு இயைபாகத் தமது வாழ்முறையைத் கட்டமைத்துத் தமக்கிடையே உறவாடியும் பிரச்சினைகள் ஏற்பட்ட பொழுது பேசித்தீர்த்தும் சில நேரங்களில் போராடியும் வாழ்ந்து தமது இருப்பினை நிலைநிறுத்தி வந்தனர். இதுவே உலகின் இயற்கையாகவும் இருந்துவந்தது. ஆனால் முதலாளித்துவ ஏகாதிபத்தியம் தமது நாட்டின் தம்வர்க்க நலன் சார்ந்து, அந்நாடுகளின் மதம், மொழி, பண்பாடு என்பவற்றினை அழித்து, தம்நாட்டின் மதம், மொழி, பண்பாட்டினைத் திணித்துத் தமக்கு விசுவாசிகளாக்கி என்றும் தம் காலைச் சுற்றி சுற்றி வாலாட்டவைத்தபடி, அவர்தம் உழைப்பினையும் நாட்டு வளங்களையும் கொள்ளையிட்டனர். அது தொடர்ந்து முடியாமற் போனபோது, அம்மக்களிடையே மதம், மொழி,பண்பாடு என்பவற்றினை முன்மைப்படுத்தி உசுப்பேத்தி விட்டு, மோதவைத்து சொட்டுகின்ற இரத்தத்தினை நரிகளாக நின்று சுவைபார்க்கின்றனர். இதனை விளங்காத, புரிந்துகொள்ள முயற்சிக்காத கொம்பு சீவப்பட்ட கடாக்களாய் முட்டி முட்டியே செத்துக்கொண்டிருக்கின்றனர்.

மேலே குறிப்பிட்ட குறிப்பு இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் ஆரம்பத்தினை விளங்கிக்கொள்ளப் போது மானதாக இருக்கும் என நம்புகின்றேன். நாட்பட்டுச் சீழ்கட்டிய புண்ணுக்கு வைத்தியம் பார்க்க வேண்டுமாயின் வழிகின்ற சீழினைத்துடைத்து மருந்துவைத்துக் கட்டுவது உண்மையான வைத்தியமாகாது. அத்தகையவர் சிறந்த வைத்தியராக வுமாட்டார். அவர் தம் வயிற்றுப் பிழைப்புக்காக நோயாளியிடம் பணம் கறப்பவர் மட்டுமேயாம். உண்மையான வைத்தியர் புண் எவ்வாறு ஏற்பட்டது? சீழ் ஏன் பிடித்தது? என்பதை ஆராய்ந்து பார்ப்பார். முள்ளுக்குத்தி காலின் தசையில் உட்பகுதியில் இருப்பதனலால் சீழ்பிடித்தது என்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடித்து, முதலில் சீழ் பிடிப்பதற்குக் காரணமான முள்ளினையும் சீழினையும் வெளியே எடுத்து, இரத்தம் கசிய வைத்தபின்னர் மருந்திட்டுச் சுகமாக்குவார். இவ்வைத்தியத்தின் போது நோயாளி கடினமான வலியினைத்தாங்க வேண்டும். இவ்வலி தாங்கலே நிரந்தரமான சுதந்திரத்திற்கு அத்திபாரமாகும். இல்லாமல் குத்திய முள் அப்படியே இருக்க எத்தகைய மேதைகள் வந்து நவீன கருவிகளுடன் மருந்துகள் கொண்டு வைத்தியம் பார்த்தாலும் பூரண சுகம் கிட்டாமல் புண்வந்த காலையே வெட்டி எடுப்பதுடன்தான் வைத்தியம் முடிவுக்குவரும். இத்தகைய நிலைமையே இன்று முள்ளிவாய்க்காலுடன் எமக்கு ஏற்பட்டிருக்கிறது. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் சீழ்பிடித்த புண்கால் அப்படியே இருக்க, பட்டும் முட்பாதைசென்ற நல்லகாலே வெட்டி அகற்றப்பட்டுள்ளது. என்னே பரிதாபம்! இதை யாரிடம் சொல்லி அழுவது.

இந்த நீண்ட பீடிகை தேவைதானா? என்பதை 'சாம்பல் பறவைகள்' என்ற இந்தக் குறுநாவலை வாசித்து முடித்த பின்னர் நீங்கள் உங்களுக்குள்ளேயே கேட்டுப்பார்க்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

மொழி, மதம், பொருளாதாரம், கலாசாரம் என்ற வகையில் பெரும்பான்மை இனம் அடக்கி ஆழ்கிறது என்று கிளர்ந்தெழும் மக்களிடையே ஒற்றுமை நிலவுகின்றதா? தம்மை விட பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வு உள்ளவர்க்குச் சுதந்திரம் கொடுக்க முக்கியத்துவம் கொடுக்க, அவர்களையும் ஒரு மனித ஜீவனாய்ப் பார்க்க முடிந்ததா? இல்லை அற்ப புழுவைப்போல் அருவருப்பாய்ப் பார்த்து, காலில் மிதித்து மண்போட்டு மூடிவிடுகின்றதா? என்று இன்றும் கேட்கப்பட வேண்டிய கேள்விகளாகும். ஏனெனில் சுதந்திரம் கேட்பவர்கள் தமக்குள் உள்ள சுதந்திரத்தைப் பகிரத்தெரிந்தவர்களாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்பவர்களாக இருக்கும்போதே அவர்கள் மேலும் சுதந்திரம் பெறுவதற்கு முற்றிலும் தகுதியுள்ளவர்களாவார்கள். இந்தப்பின்னணியில் இக்குறுநாவலில் வரும் ஆனந்தன் - பவானி காதல் முரண்நிலைப் பட்டதாக அமைகிறது. ஒருவர்க்கொருவர் விருப்பமும் நேசிப்பும் காதலாக இருக்கும்போது, பொருளாதார பின்புலம் அதை நிலைநிறுத்தத் தேவைப்படும் தமிழர்தம் வாழ்நிலையின் யதார்த்தமாகிவிட்ட பரிதாப நிலையினை கதையின் ஆரம்பகட்டம் சுட்டி நிற்கின்றது. இரண்டு உள்ளங் களின் ஆத்மார்த்தமான நேசிப்பு கானல் நீரானபோது, பவானி உருத்திரபுரத்தில் உள்ள தமது வீட்டிற்குச் செல்கின்றாள். அங்குபோன சில மாதங்களில் வன்னிச் சமர் தொடங்குகின்றது. அதன் உக்கிரத்தினை கதையின் பிற்பகுதி கூறிச்செல்கிறது.

தனது ஆசைகள் அனைத்தும் நிராசையாகும் போது விரக்தியடையும் பவானி பின்வருமாறு கூறுகின்றாள்.

> "அது கிளியர்பண்ணப்படாத இடமாக இருந்தாலும் அங்குள்ள மக்களின் மனம் கிளியர் பண்ணப்பட்டுத் தான் இருக்கு..."

எனும் கூற்று இலங்கை இராணுவத்தால் விடுவிக்கப் பட்ட பகுதியில் உள்ள மக்கள் மட்டுமே போட்டி பொறாமை யுடன் வாழ்கின்றனர். கட்டுப்பாடில்லாத பகுதி மக்கள் நிறை வான மனத்துடன் இருப்பதாக ஒரு பிரமையை ஏற்படுத்து கின்றது. பவானியும் குடும்பத்தினரும் அங்கு நடைபெற்ற கடும்மோதலில் பிரதேசம் பிரதேசமாக இடம் பெயர்கின்றனர். இடப்பெயர்வின்போது தமது உழைப்பினால் தேடிய வீடு வாசலை விட்டுப் பிரியமுடியாமல் வெறும் உடல் மட்டும் பிள்ளைகளுக்காய் பிரிகின்ற அவலத்தினையும், இடப்பெயர் வால் தங்க இடமின்றி அலைந்து திரிதல். ஷெல்வீச்சு, அவச்சா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ வசதியில்லாமல் இழப்பு என இடம்பெற்ற அவலங்களை நேரில் நின்று பார்த்ததுபோல் சொல்லிச் செல்கின்ற பாங்கு சிறப்பாக உள்ளது.

கதையின் திருப்பமாக பவானியின் மைத்துணர் போராளியாக இருந்தபடியே பவானியை ஒரு தலையாக, அதேவேளை ஆத்மார்த்தமாகக் காதலித்தல், பவானி அக்காதலை ஏற்கமுடியாமல் அல்லாடுவதும் உயிர்ப்புடன் சொல்லப்படுகின்றது. இதுவும் போரின் விளைச்சல்தான் என்பதைக் கதாசிரியர் காட்டுவது யதார்த்தமே.

சண்டையில் மாட்டுப்பட்டு மீளமுடியாமல் விழிக்கும் மக்கள் எல்லாத்திசையிலும் ஓடி ஓடி முடியாமல் கடைசியில் யுத்தத்திலிருந்து வெளியேற விடாமல் தடுக்கும் புலிகள் மீது பாய்கின்ற சந்தர்ப்பமும் மிகவும் இயல்பாகச் சொல்லப் பட்டுள்ளது. நாய் பூனையைத் துரத்தும். பூனை பயந்து ஓடிக் கொண்டிருக்கும். எங்குமே ஓடமுடியாமல் நாய் மறிக்கும் போது, மிகுந்த சினத்துடன் உயிர்குடிக்கும் ஆவேசத்துடன் நாய்மீது பூனை பாயும். இத்தகைய சந்தர்ப்பமே அப்பாவியான பொது மக்களுக்கும் ஏற்படுவதாகக் கதை அமைகின்றது.

வயதானவர்கள், குழந்தைகள், நோயாளிகளை ஏற்றிச்செல்லத் தயாராகநிற்கும் வெளிநாட்டுக் கப்பலுக்குச் செல்வதற்கும் புலிகளின் புலனாய்வுப் பகுதியினரின் மனிதாபிமானமற்ற கேள்விகள் மனிதாபிமானம் படைத்தோரைச் சிந்திக்கவைக்கும்.

> "குழந்தையை வச்சிருக்கிற இவவின்ரை புருஷன் எங்க...? நீங்கள் மாவீரர் குடும்பமோ...? உங்கட குடும்பத்தில் ஆரும் போராளியாக இருக்கினமோ..?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்க்கால் வரை விரட்டப்பட்ட பவானி குடும்பம் இராணுவத்திடம் சரணடைவதுடன் தமது ஓட்டத்தினை நிறுத்திக் கொள்கிறது. இரட்சகர்கள் அரக்கர்களாகவும் அரக்கர்கள் எனச் சித்தரிக்கப்பட்டவர்கள் எவ்விதமான கேள்வியுமின்றி தேவையறிந்து உதவுவதாகவும் நிலைமை தலைகீழாக மாறுவதுடன் கதையின் ஓட்டம் சற்று இளைப்பாறுகின்றது. இருப்பினும் பிரச்சினை இன்னமும் முடியவில்லை. அதன் வடுக்கள் உறுத்திக்கொண்டே இருக்கின்றன என்பதைப் பவானியின் கூற்று உறுதிப்படுத்துகின்றது.

"அண்ணியும் அப்பாவும் ஆயிரக்கணக்கானவர்களோட அந்த உலகம் போயிற்றாங்க.. உங்களுக்கெல்லாம் அந்தச் செய்திகள் தெரிய வாய்ப்பில்ல.. முல்லைத் தீவிலையும், கிளிநொச்சியிலையும் இருந்த மக்கள் முகத்தில் இனி உண்மையான சிரிப்பைப் பார்க்க வேணுமெண்டா இன்னுமொரு புதிய தலைமுறை உருவாகவேணும்.. அது எட்டு வயதான உமாவுக்குப் பிறகு வளர்ந்துவாற பிள்ளைகளாலதான் முடியும்.. அதுவரை எங்களால சிரிக்க முடியாது...."

சிறந்த பல சிறுகதைகளை எழுதியதோடு நான்கு புத்தகங்களை வெளியிட்டுள்ள கிழக்கின் கல்முனை வாசியான எழுத்தாளர் எஸ்.அரசரெத்தினம் அவர்கள் துணிந்து வன்னிச் சமரின் பின்புலத்தில் முதன் முயற்சியாகக் குறுநாவல் ஒன்று எழுதியுள்ளது இன்றைய காலத்தின் தேவையாகும்.

வன்னிமக்களின் உண்மையான உழைப்பும் அவர்தம் போராட்டமும் வெறும் சாம்பலாகாமல் கோரைப் புற்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மீண்டும் முளைத்து எதிர்கால சந்ததியினர்க்கு சாட்சிபகர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்ற பேரவாவை, குறுநாவல் மூலம் பூர்த்தி செய்தமை பாராட்டத்தக்கதாகும். மேலும் பிரச்சினையை ஒரு பக்கமாய் பார்க்காமல் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களையும் பார்க்கின்ற போக்கு இவரிடம் வளர்ந்து செல்வதனை இக்குறுநாவலைப் படிக்கின்றபோது புரிந்துகொள்வீர்கள் என நம்புகின்றேன்.

எழுத்தாள நண்பர் எஸ்.அரசரெத்தினம் அவர்களின் சில கதைகளைப் பார்த்த போதிலும் நேரடி அறிமுகம் இக்குறுநாவல் கிடைக்கும் வரை இருந்ததில்லை. இருப்பினும் நண்பர் ஒருவர்மூலம் என்னை அணுகி, அதுவும் வன்னி மண்ணை அறிந்தவரிடம் முன்னுரை பெறவேண்டுமென்ற ஆவல் என்னைக் கவர்ந்தது. உடனே ஒப்புக்கொண்டேன். அதன் பிரதிபலிப்புத்தான் இம்முன்னுரை. இக்குறுநாவல் இன்னும்பல நாவல்களுக்கு கால்கோள் இடுவதாக அமையும் என நினைக்கின்றேன். எழுத்தாளருக்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். எல்லாவற்றுக்கும் மேலாக வாசகர்களே சிறந்த விமர்சகர் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

வி.எஸ்.இதயராஜா,
பணிப்பாளர்,
தமிழ் மொழிப் பிரிவு,
கல்வி அமைச்சு,
இசுறுபாய - பத்தரமுல்லை.

284, சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னுரை

இலங்கை சுதந்திரமடைந்த நாள் தொடக்கம் தமிழ் மக்கள் தமது இழந்துபோன உரிமைகளைப் பெறும் பொருட்டு, காலத்துக்குக் காலம் ஆட்சியாளர்களுக் கெதிராகப் பல்வேறு போராட்டங்களை நடாத்தி வந்துள்ளனர். மிதவாதத் தலைவர்களின் காலத்தில் அஹிம்சை வழிகளில் முன்னெடுக் கப்பட்ட இப்போராட்டங்கள் யாவும் 1983 களின் பின்னர் இளைஞர்களின் பிரவேசத்தால், தீவிர ஆயுதப்போராட்டமாக உருமாற்றம் பெற்றன. இருபத்தைந்து வருடங்களுக்குக் கூடுதலாக தொடர்ச்சியாக நடைபெற்ற இவ்வாயுதப் போராட்டத் தினால் இலட்சக்கணக்கான மனித உயிர்கள் காவுகொள்ளப் பட்டன. அத்துடன், கோடிக்கணக்கான பெறுமதிமிக்க சொத்துக்களையும் நாடு இழக்க வேண்டியதாயிற்று. இவற்றைவிட, மக்கள் அனுபவித்த துன்பங்களையும், மன உளைச்சல்களையும் எழுத்தில் விபரிக்க முடியாது.

முழு உலகிலும் நமது நாட்டிற்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியதாகக் கருதப்படும் இவ்வாயுதப் போராட்டம் கடந்த வருடம் 2009 மே மாதம் முடிவுக்கு வந்தது. வன்னிப் பெரு நிலப்பரப்பின் மீது அரசபடைகள் மேற்கொண்ட பாரிய படையெடுப்பைத் தொடர்ந்து, இது நிறைவுபெற்றதாக அரசு அறிவித்தது. இவ்வறிவிப்பைத் தொடர்ந்து, நாட்டில் இப்போது சுமுக நிலை காணப்படுவதால், மக்கள் படிப்படியாக தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதை நம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் போராட்டங்களைப் பற்றிய படைப்புக்கள் போதுமான அளவிற்கு இன்னும் வெளிவரவில்லையென்னும் குறைபாடு தமிழர்களுக்கு மட்டுமன்றி, உலகளாவிய அளவில் ஏனைய இன மக்களுக்கும் உள்ளது. உண்மையைச் சொல்லப் போனால் இலங்கையரான நமக்கும் இதில் கருத்து வேறுபாடு கிடையாது. கடந்த காலங்களில் எழுத்தாளர்கள் சிலருக்கு ஏற்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகளால் இவ்வாறான படைப்புக்கள் நின்று போயின, அல்லது மந்த கதியில் இருந்தன என்பதே உண்மை நிலையாகும். இப்போதைய நிலையில் படைப்பாளிகள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பேற்பட்டிருப்பதால் இனிவரும் காலங்களில் போராட்டங் களைப் பற்றிய புதிய ஆக்கங்கள் வெளிவருமென்ற நம்பிக்கை மனதில் துளிர்விடத் தொடங்கியுள்ளது.

'சாம்பல் பறவைகள்...' என்னும் இந்த குறுநாவல் வன்னிச் சமரின் போது, சாதாரண மக்கள் அனுபவித்த அவலங்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் என்னால் எழுதப்பட்டது. இதில் வரும் பாத்திரப் படைப்புக்கள் அனைத்தும் எனது கற்பனையில் உதித்தவையே. எத்தனையோ ஆயிரக்கணக்கான குடும்பங்களை அழித்தது மட்டுமின்றி, பலரின் எதிர் காலத்தையும் கேள்விக் குறியாக்கிவிட்டுப் போயிருக்கும் வன்னி யுத்தத்தின் வடுக்கள் ஆறிப் போவதற்கு இன்னும் சில தலைமுறைகளாவது தேவைப்படுமென்பது எனது எண்ணம். கிளிநொச்சி, முல்லைதீவு மாவட்டங்களில் நடைபெற்ற யுத்த நிகழ்வுகளின் போது, அம்மக்கள் அனுபவித்த அவலங்களை சிறுகதைகளாகவோ, சில நாவல் களாகவோ இப்போதே எழுதி முடித்துவிட இயலாது. இனி வரும் காலங்களிலும் படைப்பாளிகளால் இச் சம்பவங்கள் நினைவு கூரப்பட்டு, புதிய புதிய ஆக்கங்கள் வெளிவரத்தான் போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதுக்கு கூடுதலான சிறுகதைகளை எழுதியுள்ள நான் இதுவரை நான்கு புத்தகங்களை வெளியிட்டுள்ளேன். ஆனாலும் "சாம்பல் பறவைகள்" என்னும் பெயரில் வெளிவரும் இதுவே எனது முதல் நாவல் ஆகும். இந்நாவலை என்னை எழுதத் தூண்டியவர்கள் நண்பர்களான உமா வரதராஜன் அவர்களும், எஸ்.ருத்ரா அவர்களும் ஆவார்கள். தனது வேலைப் பளுக்களுக்கு மத்தியிலும் நண்பர் ருத்ரா அவர்கள் இதற்கான அட்டைப்படத்தையும் வடிவமைத்து தந்தார். அவர்கள் இருவரும் எனது நன்றிக்குரியவர்கள். இவர்களுடன் இதற்கான முன்னுரையை வழங்கிய கவிஞரும், எழுத்தாளருமான கல்விப் பணிப்பாளர் மதிப்பிற்குரிய வி.எஸ்.இதயராஜா அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றிகள். கையெழுத்துப் பிரதியை அழகாக கணனிமயப்படுத்திய தம்பி எம்.கிருபராஜா அவர்களுக்கும் நன்றிகள்.

வன்னியில் நடைபெற்ற இறுதிச் சமர் பற்றி கிழக்கிலிருந்து வெளிவரும் முதல் நாவல் இதுவாகும். எனது முந்திய படைப்புக்களுக்கும், வெளியீடுகளுக்கும் ஆதரவு நல்கிய வாசகர்களாகிய நீங்கள் இதனையும் ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் 'என்னுரை'யை நிறைவு செய்கின்றேன்.

அன்புடன்,

எஸ்.அரசரெத்தினம்.

'ராஜ்பதி'
V.V.றோட்,
கல்முனை -02
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பல் பறவைகள்

மீனினம் பெருகிநிதம் அலைகளிற் றெறிந்துவந்து
பூவினில் கதைபடிக்கும் வண்டிசையின் தொனிகூட
நாணிடும் வகையிலொரு கீதமழை யாழ்மீட்டும்
தேனிசைக் கடற்பரப்பால் சூழ்ந்ததெங்கள் நாடு

கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருநீல வானமும், சமதளப் பூமியுமாக அந்தப் பிரதேசம் முழுவதும் வெட்டவெளியாக்கப் பட்டிருந்தது. சூரியனின் நேர்பார்வையைதடுத்து நிறுத்தி, சுட்டெரிக்கும் வெயிலிலிருந்து மண்ணைப் பாதுகாத்த மாபெரும் விருட்சங்கள் வேரோடு வேராக வெட்டி ஒதுக்கப் பட்டிருந்தன. வன்னியின் வளமிக்க காடுகளனைத்தும் சின்னாபின்னமாகச் சிதைக்கப்பட்டு, செயற்கைக் கிராம மொன்று அவ்விடத்தில் உருவாக்கப் பட்டிருந்தது. அந்தப் புதுக் கிராமத்தின் குடியிருப்புக்களாக அமைக்கப்பட்டிருந்த, கணக்கற்ற வெண்ணிறக் கூடாரங்களும் குளக்கரைக் கொக்குகளை ஞாபகப்படுத்தின. அந்தக் கூடாரங்களில் குடியிருந்த மக்கள் அனைவரும் முகாம்களென்ற பெயரில், வேற்றுக் கிரக வாசிகள் போல் முள் வேலிகளுள் அடைக்கப் பட்டிருந்தனர். மக்களின் மன வெப்பிசாரம் உஷ்ணத்துடன் கூடிய கோடைக்காற்றாக உருவெடுத்து புழுதி மண்ணை வாரி இறைத்துக் கொண்டிருந்தது.

மூன்று மணி நேரத்திற்கு மேலாக அந்த முகாம்களுக்கு வெளியில் காத்துக் கிடந்த ஆனந்தனுக்கு பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. இரண்டு நாட்களாக இந்த முகாம்களுக்கு அலைந்து திரிவதிலேயே அவனுடைய பொழுது போய்க் கொண்டிருந்தது. கொண்டுவந்திருந்த குடிதண்ணீரும் முடிவடைந்து வெற்றுப் போத்தலையும் வீசி எறிந்து விட்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு 'பிளேன் ரீ' குடிக்கக் கூடிய வசதி கூட அந்த இடத்தில் இருக்கவில்லை. உடலும், மனமும் ஒன்று சேரக் களைத்து அவனைப் பலவீனமடையச் செய்திருந்தன. நேரம் போகப் போக, தனது எண்ணம் நிறைவேறுமென்பதில் அவன் நம்பிக்கை இழக்கத் தொடங்கினான்.

இந்தக் கோலத்தில் அவனைப் பார்ப்பவர்கள் அவன் ஒரு பட்டதாரி ஆசிரியன் என்பதைச் சத்தியம் செய்தாலும் ஏற்க மறுப்பார்கள். வியர்வையால் பிசுபிசுத்திருந்த பன்னியன் போடாத அவனுடைய உடம்பில் ஒரு வெள்ளைச் 'சேட்' ஒட்டியிருந்தது. கால் மடிப்புகளில் சேறுபடிந்திருந்த கறுப்புக் கால் சட்டையொன்றை வேண்டா வெறுப்பாக அவன் ஒட்டியிருந்தான். முகத்தில் வளர்ந்திருந்த தாடியும் மீசையும் முறையாக வெட்டிவிடப்படாத சவுக்கு மரத்தின் இலைகளை ஒத்திருந்தன. ஊத்தை தேய்த்துக் குளித்து ஒரு வாரங்கூட ஆகியிருக்கலாம். ஒழுங்காக வாரிவிடப்படாத அவனுடைய தலை பனாட்டுக்குப் பாணியெடுத்த பனங்கொட்டையைப் போல் இருந்தது. இவை ஒன்றைப் பற்றியும் அவன் கவலைப்பட்டவனாகத் தெரிய வில்லை. அவனுடைய கவனமெல்லாம் இராமநாதன் முகாமிலுள்ள முருகேசு - பவானி உருத்திரபுரம் என்னும் அவனுடைய அன்புக் குரியவளை எப்படியும் சந்தித்து விட வேண்டுமென்பதிலேயே இருந்தது.

'.......... இராமநாதன் முகாம், அருணாசலம் முகாம், ஆனந்தகுமார சுவாமி முகாம்....' என்ன பொருத்தமான பெயர்களையெல்லாம் இந்த முகாம்களுக்கு வைத்திருக்கின் றார்கள். இந்தப் பெரியவர்களெல்லாம் இலங்கை மக்களுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததாகவல்லவா வரலாறு சொன்னது. தங்கள் பெயரில் முகாம்களமைத்து, தமது மக்களை அடிமை நிலையில் அடைத்து வைத்திருப்பதை இன்று பார்க்க நேர்ந்தால் அவர்கள் என்ன நினைப்பார்கள்....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்ட சகோதரர்களாகத் தாய் நாட்டைக் கட்டியெழுப்பு வோமென்ற கோஷத்துடன் தங்களைக் குதிரை வண்டியிலிருத்தி குதிரைக்குப் பதிலாக வண்டியை இழுத்துக் கொண்டு கொழும்பு நகர வீதிகளை வலம் வந்த அந்த சிங்களத் தலைவர்கள் எங்கே என்று இவர்கள் தேடமாட்டார்களா...? ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒற்றுமையாக வாழலாம் என்ற தங்கள் தீர்க்க தரிசனம் பொய்த்துப் போய்விட்டதை எண்ணி வெட்கித் தலை குனியமாட்டார்களா.. என்ன.....?

'........ அண்ணை நீங்கள் தந்த பெயர் விபரங்களை யெல்லாம் உரிய இடத்தில் குடுத்திட்டன்.... இன்னும் கொஞ்ச நேரத்தில அவ வந்ததும் உங்களுடைய பெயரைக் கூப்பிடுவினம்.....'

ஆனந்தனுடன் வந்த இன்னொருவன் அவனுடைய சிந்தனையைக் குழப்பினான்.

'........ சரியாகக் கொடுத்தீர்களா..... அவள் நிச்சயம் வருவாளா....?

முருகேசு - பவானி - உருத்திரபுரம் ... அவ ஒரு ரீச்சர்.

அவன் பதில் சொல்லிக் கொண்டே நடந்து போய்க் கொண்டிருந்தான். ஆனந்தனுடைய பசியும், களையும் கணப் பொழுதில் எங்கோ காணாமல் போய்விட்டிருந்தன. அவன் எழுந்து காற்சட்டையில் ஒட்டியிருந்த சேற்றைத் தட்டிவிட்டு, தலையைக் கைவிரல்களால் சீவிச் சரி செய்து கொண்டிருந் தான்.

◈◈◈◈◈



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக இரண்டு வருடங்களுக்கு முன்பு ஆனந்தன் படிப்பித்துக் கொண்டிருந்த வவுனியா மகாவித்தியாலயத்திற்கு அவள் நியமனம் பெற்று வந்தது நேற்றுப் போல் இருந்தது. கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த அவள் முதல் நாள் வவுனியாவிலுள்ள அவளுடைய தூரத்து உறவினர் ஒருவரின் வீட்டிலிருந்தே பாடசாலைக்கு வந்திருந்தாள். பார்ப்பதற்கு அப்படியொன்றும் பிரமாதமான அழகியென்று அவளைச் சொல்லிவிட முடியாது. ஆனந்தனுடன் ஒப்பிடுகையில் நிறமும் கொஞ்சம் கம்மியாகவே இருந்தாள். சராசரிப் பெண்களைவிட உயரத்தில் இரண்டு அங்குலம் குறைவாக இருந்தாலும் 'ஹை ஹீல்ஸ்' காலணியினால் அதனைச் சரி செய்திருந்தாள். வன்னி மக்களுக்குரிய உருண்டு திரண்ட உடல் வாகும், குழிவிழுந்த கன்னங்களும், காந்த சக்தி கொண்ட கண்களும் அவளைக் கவர்ச்சிமிக்கவளாக்கப் போதுமானவையாக இருந்தன.

கண்டிப்புக்குப் பெயர் பெற்ற ஆசிரியரான ஆனந்தனுடன் இரண்டு நாட்கள் வரை அவள் பேசக் கூட இல்லை. மூன்றாம் நாள் அதிபர்தான் அவரது அறைக்கு அழைத்து அவளை அறிமுகம் செய்து வைத்தார். ஆனந்தனைப் பார்த்த முதல் பார்வையிலேயே தனது அழகான பற்களை அளவாக வெளிக் காட்டி பளிச்சென்று புன்னகைத்தாள் அவள். அவனும் ஒரு புன் சிரிப்பு மூலம் அதனை ஏற்றுக் கொண்டதாகப் பதில் சொன்னான். பின்னர் வசதியான இருப்பிடமொன்றை அவளுக்கு ஒழுங்கு செய்து கொடுக்கும்படி அவனைக் கேட்டுக் கொண்ட அதிபர், தேவையான உதவிகளை ஆனந்தனிடம் கேட்டுப் பெறுமாறும் அவளுக்கு அறிவுரை வழங்கினார். மூத்த ஆசிரியையான நிர்மலா ரீச்சருடன் தொடர்பு கொண்டு அவவுடன் பவானி தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தான் ஆனந்தன். அதன் பின்னர் அவர்களுடைய நட்பு பசளையிடப்பட்ட பயிரைப் போல் செழித்து வளரத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் தமிழ்த்தினப் போட்டிக்குரிய ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. ஆனந்தனும் பவானியும் பொறுப்பாசிரியர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். அந்த நாட்களில் தான், ஒரு நாள் அவர்களுடைய பாடசாலைக்கு முன்னால் பயங்கரமான குண்டு ஒன்று வெடித்தது. முழு நகரையுமே நடுங்க வைத்த அந்தக் குண்டு வெடிப்பில் பாதுகாப்புப் படையினர், பொதுமக்கள் எனப் பலரும் வெடித்துச் சிதறிப் போயினர். அதனைத் தொடர்ந்து நகரில் பெரும்பகுதி சுற்றி வளைப்புத் தேடுதலுக்குள்ளானது. அந்தத் தேடுதலில் விடுவிக்கப்படாத பிரதேசத்து அடையாள அட்டையுடன் இருந்த பவானி ரீச்சரும் சந்தேகத்தில் இராணுவ முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டாள்.

ஆனந்தன் உடனடியாக அதிபருடன் சேர்ந்து அவளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டான். சிங்கள மொழியில் சரளமாக உரையாடும் திறனைக் கொண்டிருந்த அவன், தானே முன்னின்று முழுப் பொறுப்பையுமெடுத்து அவளை விடுவிக்க உதவினான். அன்றைய தினம் இருட்டி விட்டதால் பவானியை அவளது இருப்பிடம் கொண்டு விடும் பொறுப்பை ஆனந்தனிடம் ஒப்படைத்து விட்டு அதிபர் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீட்டுக்குப் போய்விட்டார்.

ஒரு ஆண் தனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பலரது முன்னிலையிலும் கதாநாயக அந்தஸ்தைப் பெறுவானாயின் அங்குள்ள பார்வையாளர்கள் மனதில் அவன் இலகுவாகவே இடம் பிடித்துவிடுவான். அந்தச் சந்தர்ப்பம் ஒரு பெண்ணுக்கு உதவுவதாக அமையுமானால் அந்தப் பெண் அவனை விரும்புவது பெரும்பாலும் தவிர்க்க முடியாததாகிவிடும். அவ்விருப்பம் நாளடைவில் அவர்களைக் காதலர்களாக மாற்றி விடவும் கூடும். இதற்குப் பவானியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிவிலக்காகவில்லை. மாலைப் பொழுதும், தூறல் மழையும் மனப்பயத்துடனிருந்த பவானியை ஆட்டோவில் ஆனந்தனுடன் நெருங்கியிருக்கச் செய்தன. அவன் அவளிடமிருந்து விலகியிருக்க முயற்சித்த போதும் வாலிப வயதும், வலிய வந்த சந்தர்ப்பமும் அதற்கு ஒத்துழைக்க மறுத்தன. அரைமணி நேர ஆட்டோப் பயணம் அவர்களுக்கு அரை நிமிட நேரத்தில் முடிவடைந்தது போல் இருந்தது.

வீட்டு வாசலில் நிர்மலாரீச்சர் கவலையுடன் நின்று கொண்டிருந்தார். பவானியைக் கண்டதும் மகிழ்ச்சியால் மலர்ந்த அவவின் முகம் நொடிப் பொழுதில் மாறிப் போனதை ஆனந்தன் அவதானிக்கத் தவறவில்லை. அந்த மாற்றம் அவர்கள் இருவரின் நெருக்கத்திற்கும் அவவின் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதை அவனுக்கு உணர்த்திற்று. உடனடியாகத் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட நிர்மலா ரீச்சர் நடந்தவற்றைக் கேட்டறிந்து கொண்டு, அவனுக்கு நன்றி கூறி வழியனுப்பி வைத்தார்.

அன்றிரவு ஆனந்தனின் குடும்பத்தைப் பற்றியும், அவனுடைய கண்டிப்பான தகப்பனாரைப் பற்றியும் நிர்மலா ரீச்சர் பவானிக்கு கதை கதையாகச் சொன்னார். மணியம் என்றழைக்கப்படும் ஆனந்தனின் தகப்பனாரான சுப்பிரமணியத் தார் யாழ்ப்பாண நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தை செல்வா, தலைவர் பொன்னம்பலம் போன்றவர்களின் காலத்திலிருந்தே அரசியலில் ஈடுபடத் தொடங்கியவர். வவுனியா கிராம சபையாக இருந்த காலத்திலேயே சிலகாலம் அதற்குத் தலைவராகவும் இருந்தவர். எத்தனையோ விடுதலை இயக்கங்கள் நகரில் இயங்கிய போதும் மக்கள் செல்வாக் கையும், அரச உயர் அதிகாரிகளின் அபிமானத் தையும் அவர் இழக்காமல் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே மகனான ஆனந்தனுக்கு வவுனியா நகரில் பெருமளவு சொத்துக்களைத் தேடி வைத்திருக்கும் அவர், உயர் குலத்தைச் சேர்ந்த வசதியான குடும்பத்திலேயே சம்பந்தமும் செய்து கொள்வார் என்பதையும், திருமண விஷயத்தில் தகப்பனாரின் விருப்புக்கு மாறாக மகன் ஒருபோதும் நடந்து கொள்ள மாட்டான் என்பதையும் விலா வாரியாக விளக்கிக் கொண்டிருந் தார் நிர்மலா ரீச்சர். ஆனால் இவற்றில் பெரும்பகுதி தூக்கத்தில் ஆழ்ந்துவிட்ட பவானியின் காதுகளைச் சென்றடையவில்லை.

நிறைவேற முடியாத அல்லது பிரச்சினைகளை எதிர் கொள்ளப் போகும் காதலைப் பற்றிச் சம்பந்தப்பட்டவர்களுக்கு முன்னெச்சரிக்கையுடன் அனுபவசாலிகளால் சொல்லப்படும் அறிவுரைகளை அவர்கள் செவிமடுப்பதில்லை. செவிமடுக்கக் கூடிய நிலையிலும் அவர்கள் இருக்கமாட்டார்கள். மற்றவர்களின் தடையும், புத்திமதிகளும் எதிர்மறையாக காதல் பயிரை செழிக்க வைக்கும் உரமாகவே பயன்படுகின்றன. சவால்களை எதிர் கொண்டு வெற்றி பெற்று வாழ்வதே காதலர்களின் தேர்வாக இருக்கின்றது. பவானியின் விடயத் திலும் அது உண்மையானதில் வியப்பில்லை.

பாடசாலையில் அரசல் புரசலாகக் கதை பரவத் தொடங்கியிருந்தது. ஆனந்தனோ, பவானியோ அதனைத் தடுக்கும் எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. தங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு கடைமையைச் சரியாகச் செய்து கொண்டிருந்தனர். நாட்கள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தன. அவனைப் பார்க்காமல் ஒரு நாள் கூட இருக்க அவளால் முடியவில்லை. சனி, ஞாயிறு தினங்கள் தண்டனை தரும் நாட்களாக இருக்கத் தொடங்கின. காதல் காய்ச்சல் அவளைப் போல் அவனையும் வாட்டத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து பாதுகாப்புக் கெடுபிடிகள் தளர்வடைந்திருந்தன. வன்னிப் பிரதேசமெங்கும் போக்குவரத்து சீராகியிருந்தது. ஏப்ரல் மாத விடுமுறைக்கு இன்னும் ஒரு வாரகால அவகாசமே இருந்தது. ஒருமாத காலப் பிரிவுத்துயர் இருவரின் முகத்திலும் வெளிப்பட்டது. இந் நிலையில் ஒரு நாள், புதுவருடப் பிறப்பிற்குத் தனது வீட்டிற்கு வரும்படி ஆனந்தனுக்கு அழைப்பு விடுத்தாள் பவானி. அதற்காகவே காத்துக் கொண்டிருந்த அவனும் மறுப்பேதும் சொல்லாமல் அவ்வழைப்பை ஏற்றுக் கொண்டான்.

எதிர்பார்த்திருந்த அந்த நாளும் வந்தது. ஆனந்தனைப் பற்றிய அனைத்துக் கதைகளையும் ஏற்கனவே வீட்டில் சொல்லி யிருந்தாள் பவானி. அவளுடைய வீட்டில் அவனுக்கு அரச மரியாதையுடன் கூடிய வரவேற்புக் கிடைத்தது. மகளுக்குச் செய்த உதவிகளுக்கெல்லாம் தகப்பனார் முருகேசர் வாய் நிறைய நன்றிகளைச் சொல்லிக் கொண்டே இருந்தார். அண்ணா குமாரையும் அண்ணி சாரதாவையும் அறிமுகம் செய்து வைத்தாள் பவானி. அவர்களுடைய குழந்தை உமாவும் அங்கிள்... அங்கிளென்று சுற்றியபடி ஆனந்தனுடன் ஒட்டிக்கொண்டாள். பவானியால் பரிமாறப்பட்ட மதிய உணவை மற்றவர்களுடன் சேர்ந்து அவனும் மகிழ்ச்சியுடன் அருந்தினான். மகிழ்ச்சியான அன்றைய பகல் பொழுது நிறைவடைய கடைசி 'பஸ்' ஸைப் பிடித்து வீடு திரும்பினான் ஆனந்தன்.

ஆனந்தன், பவானி இருவரது நடத்தைகளும் வீட்டிலுள்ள வர்களுக்கு அவர்களின் உள்ளக் கிடக்கைகளை புரிய வைத்தன. அனைத்துக் கதைகளையும் வீட்டில் சொல்லி அவர்களது ஆசீர்வாதத்தையும் பவானி பெற்றுக் கொண்டாள். அவளுடைய காதலுக்கு எங்கிருந்து எப்படி எதிர்ப்புக் கிளம்புமென்பதை அவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை. அது ஆனந்தனின் தகப்பனாரின் வடிவில் காத்திருந்தது.

◈ ◈ ◈ ◈ ◈



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவணை விடுமுறை முடிந்து பாடசாலை மீண்டும் தொடங்கி யிருந்தது. "பவானி ரீச்சரின்ட வீட்ட புதுவருடத்திற்கு ஆனந்தன் சேர் போய் வந்தவராம்" என்ற கதை பாடசாலையெங்கும் பரவலாக அடிபட்டுக் கொண்டிருந்தது. கடமையில் 'கறார்' பேர்வழியான ஆனந்தன் கடமையிலிருந்து தவறுகின்றோமா எனவும் ஒரு கணம் யோசித்தான். பவானியும் மற்றவர்களிடம் முகம் கொடுத்து நேருக்கு நேர் பேசுவதில் சிரமங்களை எதிர்நோக்கினாள். இப்படி இருக்கையில் தான் ஒரு நாள் உயர்தர வகுப்புச் சுவரில் '... ஆனந்தன் பவானி காதல்......' என்று யாரோ எழுதியிருந்தார்கள். அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் இவ்விடயம் மெல்ல மெல்ல அம்பலமானது. இதனால் மனமுடைந்து போன இருவரும் அடுத்து என்ன செய்வதெனத் தெரியாமல் குழம்பிப் போனார்கள்.

கடைக்குப் பேப்பர் எடுக்கப் போன தியாகுதான் முதன் முதலாக வந்து அந்தச் செய்தியைச் சொன்னான்.

ஐயாவுக்கு ஒரு கதை சொல்ல வேணும்....
ஏசுவியளோ தெரியாது....
பயமாய் இருக்குது....

*என்ன தியாகு ..... பயமில்லாமச் சொல்லுமன்....*

சின்ன ஐயா ஆரோ ரீச்சரோட தொடர்பாம்.... ரவுனுக்குள்ள எல்லாரும் கதைக்கினம்.... முருகன் ஸ்டோர் முதலாளியும் கேட்டவர்......

*ஆரு ரீச்சர்...... எந்த ஊராம்......?*

கிளிநொச்சியில் உருத்திரபுரமாம்..... பேரு பவானியாம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுதான்..... மணியத்தார் உருத்திரமூர்த்தியாக மாறி, மகனின் வரவிற்காக "கேற்" றையே பார்த்துக் கொண்டிருந்தார். வாசலில் ஆனந்தனின் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும், தியாகு பயத்தினால் அவ்விடத்திலிருந்து ஓடித் தப்பினான்.

'........ இந்தத் திருமணம் நடக்குமாக இருந்தால் என்னுடைய சொத்தில் ஒரு சல்லிக்காசு கூட உமக்குக் கிடைக்காது............. அதுமட்டுமல்ல, என்னையும் பிணமாகத்தான் பார்க்க வேண்டி இருக்கும்.....'

'.......... உங்களுடைய சொத்துக்களை நீங்களே வச்சுக் கொள்ளுங்க.... திருமண விடயத்தில் உங்களைத் திருப்திப்படுத்த முடியாமைக்கு என்ன மன்னிச்சிடுங்க அப்பா....'

இப்படியான சினிமா வசனங்கள் ஒன்றுமே அங்கு இடம் பெறவில்லை. வீட்டுக்கு வரும்போதே தகப்பனாரின் கோபத்தைக் கண்ட ஆனந்தன் ஒன்றுமே பேசாது நேரே தனது அறைக்குச் சென்றுவிட்டான். அவனைப் பொறுத்தவரை இப்படியானதொரு நிகழ்வை அவன் பல நாட்களாகவே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த இறுக்கமான சூழ் நிலையில்தான் மணியத்தாரின் வலதுகை என அழைக்கப்படும் அவருடைய நெருங்கிய கூட்டாளியான அருளம்பலத்தார் ஓசை எழுப்பியபடி 'கேற்' றைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார். அங்கே அடிக்கடி வரும் அருளம்பலத்தார் சொந்த வீடுபோல் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பார். அவர்களுடைய பேச்சு அரசியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி அந்தக் காலச் சினிமா வரை வியாபிக்கும். ஆளையாள் உரிமையோடு பெயர் சொல்லிக் கூப்பிடு மளவிற்கு அவர்கள் நட்பு பலமாக இருந்தது. உள்ளே வந்த அருளம்பலத்தார் நிலைமையை ஓரளவு புரிந்து கொண்டு, பேச்சுக்களை ஆரம்பித்து மணியத்தாரைப் பழைய நிலைக்குக் கொண்டுவர முயற்சித்தார்.

அன்றிரவு சாப்பாட்டு மேசையில்தான் தனது விருப்பத்தை முதல் முதலாக வெளியிட்டான் ஆனந்தன். சின்னச் சின்ன விடயத்திற்கெல்லாம் பெரிதாகச் சத்தம் போடும் தகப்பனார், தனது வாழ்க்கைப் பிரச்சினையை இத்தனை தூரம் அலட்சியம் செய்வாரென அவன் எதிர்பார்க்கவில்லை. தனக்கு அதில் உடன்பாடில்லை என்பதை மிகச் சாதாரணமாகவே அவர் சொன்னார். அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அவன் மனமுடைந்து போகவில்லை. நாளடைவில் அவருடைய மனதை மாற்றி அவருடைய ஆசீர்வாதத்துடன் பவானியைத் திருமணம் செய்து கொள்ள அவன் முடிவு செய்தான். பழைமை வாதியான அவருடன் விவாதிப்பதைவிடச் சார்ந்து போய்ச் சாதிக்கலாமென அவன் நம்பினான். அத்துடன் அந்த விடயம் முடிவுக்கு வந்ததும் அவன் படுக்கைக்குச் சென்றான்.

ஒரு கிழமை தொடர்ச்சியாக ஆனந்தன் பாடசாலைக்குப் போகவில்லை. பவானியும் அந்த நாட்களில் வேண்டா வெறுப்பாகவே போய் வந்தாள். நிர்மலா ரீச்சருக்கு விடயம் ஓரளவு விளங்கியிருந்தது. அதைப் பவானிக்குப் புரிய வைப்பதில்தான் அவள் பிரச்சினைகளை எதிர் நோக்கினாள். திங்கட்கிழமை பாடசாலைக்கு வந்த ஆனந்தன் அங்கு பவானியைச் சந்திப்பதைத் தவிர்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான வீதியில் பஸ் 'ஹோல்ற்' றில் நிர்மலா ரீச்சருடன் நின்றிருந்த பவானியைச் சந்தித்து அவன் பேசினான்.

"பவானி - நம்மட - விஷயம் வீட்டில ஐயாவுக்கு தெரிஞ்சு போச்சு.... ஆனாலும் உம்ம நான் ஏமாத்த வேணுமெண்டு நினைக்கல்ல...... வயசான காலத்தில் தாய் தகப்பனையும் நாம அனுசரிச்சுப் போகணும்....... கொஞ்ச நாளைக்குப் பொறும்....... ஐயாவின்ர மனசு மாறும்..... அதற்குப் பிறகு நம்மட வாழ்க்கையைப் பற்றி நாம யோசிக்கலாம்...... என்னால ஏற்பட்ட சிரமங்களை மன்னிச்சிடும்......"

பேசி முடித்த அவனை நேருக்கு நேர் ஒரு தடவை பார்த்துத் தலையைக் குனிந்து கொண்டாள் அவள். கண்களில் நிரம்பியிருந்த கண்ணீர் அணையை உடைத்துக் கொண்டு எந்த வேளையிலும் வெளியே பாய்வதற்குத் தயாராய் இருந்தது. அவளின் பார்வையைச் சந்திக்கத் திராணியில்லாமல் அவன் எங்கோ வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் அவர்களின் பஸ் வர, நிர்மலா ரீச்சர் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே ஏற அது புறப்பட்டுச் சென்றது.

◈◈◈◈◈



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் தவணை முடிவடைய சில வாரங்களே எஞ்சியிருந்தன. அர்ச்சனைக்குப் பயன்படப் போகும் அழகான மலராகக் காட்சியளித்த பவானி அந்தியில் வாடிப்போன மல்லிகையாக மாறி இருந்தாள். காலையில் விதம் விதமாக உடுத்தி அழகு தேவதையாகப் பாடசாலையை வலம் வந்து கொண்டிருந்தவள் கடமைக்காக மட்டுமே போய்வரத் தொடங்கினாள் அவனுடைய நிலையும் பரிதாபமாகவே இருந்தது. ஆனாலும் வெளியில் காட்டிக் கொள்ளாதவாறு பாடசாலை வேலைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டான். நாட்கள் இவ்வாறு நகர்ந்து கொண்டிருந்த வேளையில், தீர்க்கமான முடி வொன்றுடன் ஒரு நாள் அவள் வலயக் கல்வி அலுவலகத் திற்குச் சென்று வந்தாள்.

தவணையின் கடைசி நாட்களில் பாடசாலை உற்சாகமிழந்து காணப்பட்டதுடன், பலரும் கவலை தோய்ந்த முகத்துடன் இருந்தனர். அவர்களுடைய பாடசாலை ஆசிரியரொருவர் வீட்டி லிருந்த போது ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். பாடசாலையில் மாணவர் வரவு குறைந்திருந்ததுடன் ஆசிரியர்கள் பலரும் விடுமுறையில் சென்றிருந்தனர். பவானியை அன்றைய ஒரு தினத்தில் அதிபர் தனது அறைக்கு அழைத்தார். அவருடைய கையில் ஒரு கடிதம் இருந்தது. அது கிளிநொச்சி மகாவித்தியால யத்திற்கான அவளுடைய இடமாற்றக் கடிதம்....

பாடசாலையில் அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டி ருந்த பவானியின் கண்களில் ஆனந்தன் தென்படவில்லை அவளும் அவனைச் சந்திப்பதைத் தவிர்க்கவே விரும்பினாள். ஆனாலும் அன்று பிற்பகல் வேளையில் நிர்மலா ரீச்சருடன் வீட்டி லிருக்கும்போது அவன் அங்கு சென்று அவளைச் சந்தித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சந்திப்பை அவள் விரும்பாத போதும் நிர்மலா ரீச்சரின் சொற்படி அவனைச் சந்தித்தாள்..

"...என்னோட சரியான கோபமா இருப்பீர் போல...... என்னை மன்னிச்சுவிடும்.... நான் தான் யோசியாமல் நடந்திட்டன்..."

"....யோசிச்சு வாறது காதல் இல்ல ஆனந்தன் சேர்... யோசிக்காம வாறது தான் காதல். காதலுக்குக் குறுக்கே வரும் தடைகளை உடைக்கதான் யோசிக்க வேணும். அதுதான் உண்மையான காதல். அதுவெல்லாம் இப்ப முடிந்த கதை... எனக்குச் செய்த உதவிகளுக்கெல்லாம் நன்றி..."

"....இரும்....... இரும்..... என்னோட கோவிச்சுக்கொண்டு ஏன் கிளிநொச்சிக்குப் போக வேணும்... அது கிளிய பண்ணுப் படாத இடம்... அங்க எப்பவும் ஆபத்து காத்திருக்கு....."

அது கிளிய பண்ணுப்படாத இடமா இருந்தாலும் அங்குள்ள மக்களின் மனம் கிளிய பண்ணப்பட்டுத்தான் இருக்கு..... நான் என்னுடைய குடும்பத்தோடேயே போய்ச் சேரவிரும்புகிறன். இங்க இனியும் நான் யாரையும் நம்பி இருக்க ஆயத்தமில்லை...

அவள் எழுந்து உள்ளே போகவும், நிர்மலா ரீச்சர் அவனுக்கு 'ரீ' கொண்டு வரவும் சரியாக இருந்தது.

அன்றிரவு வழமைக்கு மாறாக, பவானியின் அறையில் பின்னிரவுவரை "லைற்" எரிந்து கொண்டிருந்தது. அதனை அவதானித்த நிர்மலா ரீச்சர் அறையை அண்மித்த போது உள்ளேயிருந்து விசும்பல் ஒலியுடன் அழுகைச் சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்து கொண்டிருந்தது. கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டிருந்த பவானி தலையணையை ஈரமாக்கிக் கொண்டிருந்தாள். தமிழ்த்தினப் போட்டியின் போது ஆனந்தனுடன் அவள் நெருக்கமாக இருந்து எடுக்கப்பட்ட "போட்டோ" அவளுடைய படுக்கையின் தலைமாட்டில் கிடந்தது.

"பவானி அழாதேயும்..... இது என்ன சின்னப்பிள்ளை மாதிரி..... நீர் போன பிறகு ஆனந்தன் என்னோட வெகு நேரம் கதைத்துக் கொண்டிருந்தவர்..... அவர் உம்மை ஏமாத்த வேணும் என்று ஒருபோதும் நினைக்கல்ல... அது உமக்கு விளங்குதில்ல.. அவருடைய சொல்லைக் கேளாம உம்முடைய விருப்பத்திற்கு நீர் இடமாற்றம் பெற்றுப்போறதா அவர் நினைக்கிறார்... உம்முடைய இடமாற்றத்தை கொஞ்சம் பின்தள்ளிப் போடுமன்.. எல்லாம் நல்லபடியா முடியும்.

*"ரீச்சர்.. தயவு செய்து என்னை மன்னித்திடுங்க... அவர் என்னை ஏமாற்ற விரும்பல்ல என்பது எனக்கும் தெரியும்.. ஆனா, எதிர்பார்ப்புகளோட இருந்த எனக்கு அவருடைய பதில் ஏமாற்றமாக இருந்தது. நான் தொடர்ந்தும் இங்க இருந்தா என்னால அவருக்கும் கஷ்டம்.. அப்பாவுக்கும் பிள்ளைக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்திய பழியும் என்னைச் சேரும். நான் வெட்கத்தை விட்டு உங்களிடம் சொல்லுறன் ரீச்சர்... இந்த ஊரில இருந்து கொண்டு அவரைப் பார்க்காமல் அவருடன் கதைக்காமல் என்னுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று நான் நினைக்கல்ல. அதுதான் மனதைக் கல்லாக்கிக் கொண்டு ஒருதலைப் பட்சமாக இந்த முடிவை எடுத்திற்றன்.."*

அப்படி என்றால் உம்மை நம்பி இருக்கிற ஆனந்தனுக்கு என்ன பதில் சொல்லப் போறீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீச்சர்.. இந்த விடயத்தில எனக்கு எல்லாமே நீங்கள் தான்.. நான் ஊருக்குப் போனாலும் அவர் நினைவில்தான் வாழ்வேன்.. அவருடைய அப்பாவின் சம்மதம் எப்போது கிடைக்கின்றதோ அப்போது அவரை வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்கள்... அதுவரை நாங்கள் தூரத்தில் இருப்பதுதான் நல்லது. எங்கள் தொழிலுக்கும் அதுதான் கௌரவம்... என்மீது கோபமாக இருக்கும் ஆனந்தன் சேருக்கு இதையெல்லாம் தெரியப்படுத்துங்க..

சரி.. சரி.. நீர் சொல்லுறதும் ஒருவகையில ஏற்றுக் கொள்ளக்கூடிய மாதிரித் தான் இருக்குது. இனி எல்லாம் கடவுள் இட்ட வழி. காலம் உங்களைச் சேர்த்து வைக்கட்டும்.. இனி போய்ப் பேசாமல் தூங்கும் நாளைக்கு காலையில் நீர் ஊருக்குப் போக வேணும்.

◈◈◈◈◈

பவானி சொந்த ஊருக்கு இடமாற்றம் பெற்று வந்ததால் வீடு முழுவதும் ஒரே மகிழ்ச்சிக்களையாக இருந்தது. இருதய நோயாளியான தன்னைக் கவனித்துக் கொள்ள கடைசி காலத்தில் மகனுடன் மகளும் வந்துவிட்டாளென்று முருகேசர் சந்தோசப்பட்டார். அண்ணன் குமாரும் அண்ணி சாரதாவுங் கூட இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்தனர். உமாவைப் பெற்று எட்டு வருடங்களின் பின் சாரதா இரண்டாவதை உண்டாகியிருந்தாள். பவானியின் வரவு தனது வீட்டு வேலைப் பளுவைக் குறைக்குமென சாரதா ஆறுதலடைந்தாள். மாமியுடன் ஒன்றாகப் பாடசாலைக்குச் செல்லலாமென உமாவும் செல்லங் கொண்டாடினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருந்த பவானி, தான் மட்டும் மனதுக்குள் அழுது கொண்டிருந்தாள். அவளுடைய கலகலப்பான பேச்சு காணாமல் போய் வெகு நாளாகிவிட்டிருந்தது. சாப்பாடு, உறக்கம் மட்டுமின்றி, சகல நடவடிக்கைகளிலுமே அவள் குழம்பிப் போயிருந்தாள். குமாரும், சாரதாவும் கூட இதனைக் கவனித்தார்கள். ஆனால் தாங்களாகவே பேச்சைத் தொடங்குவதற்குத் தயக்கம் காட்டினார்கள்.

பிள்ளையார் படத்தில் கொழுவியிருந்த தினக் கல்ண்டரின் பருமன் தேய்பிறை போல் நாள்தோறும் சுருங்கிக் கொண்டு இருந்தது. உமாவும் பவானியும் பள்ளிக் கூடம் போயிருந் தார்கள். சாரதா சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒத்தாசையாக குமார் தேங்காய் துருவிக் கொண்டி ருந்தான். முருகேசர் ஈசிச் செயாரில் காலை நீட்டிக்கொண்டு கண்களை மூடியபடி படுத்திருந்தார். அவருடைய மார்பில் அருக்குப் பிடித்தமான கலைஞரின் "பாயும் புலி பண்டார வன்னியன்" புத்தகம் விரித்தபடி இருந்தது.

*'கேட்டியளே...... பவானியின்ற முகத்தில இஞ்ச வந்த நாள் தொடக்கம் சிரிப்பக்காணல்ல...... அவ முன்னையப்போல் இப்ப ஒழுங்காச் சாப்பிடறதும் இல்ல...... நீங்க இதுகளப் பார்க்கிற இல்லையா?*

*ஓமோம் நானும் அவதானிச்ச நான்..... பிரச்சின என்ன வெண்டு அவ சொன்னாத்தானே நாம ஏதும் செய்யலாம்...*

*அப்பிடியில்ல...... நாமதான் கேட்க வேணும்.......*
*அவ தானாச் சொல்ல மாட்டா......*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவரை தூங்குவதுபோல் படுத்திருந்த முருகேசர் செருமிக் கொண்டு கண்களை விழித்துப்பார்த்தார்.

நீங்க அவவிட்ட ஒண்டும் கேட்க வேணாம்... நான் சொல்றன்..... அவ விரும்பியிருந்த பெடியனைப் பிரிஞ்ச வேதனையில் இப்ப இருப்பா..... கொஞ்ச நாளைக்கு நாம விட்டுப் பிடிப்பம்.... அதுக்குப் பிறகு எல்லாம் தானாச் சரியா வரும்.

ஓமோம்.... மாமா சொல்லுறதும் ஒரு வகையிலே சரிதான்....

பொறுத்திருந்து பார்ப்பம்......

முருகேசர் கண்களை மூடிக் கொண்டு கோடை வெயிலின் அகோரம் தாங்க முடியாதவராக மீண்டும் தூங்க ஆரம்பித்தார். குமார் மெதுவாகச் சாரதாவை நோக்கிப் பேச்சைத் தொடர்ந்தான்.

இவ பெரிய நல்ல மனுஷியாட்டம்...... கலியாணம் பேசி இருக்கக்குள்ளயே ஒரு நாளைக்குத்தானும் என்னைப் பார்க்காம இருக்க மாட்டா....... இப்ப பவானியைப் பற்றின ஆராச்சி வேற....... அவள் பாவம்......

*ஓமோம்...... உங்கட கெட்டிக்காரத் தனம் எனக்குத் தெரியும்...... வீட்டுல புழுகு மூட்டய அவிழ்த்துப் போட்டு இருட்டினதும் ஒவ்வொரு நாளும் எங்கட வீட்ட வாறது.... நான் அப்பவே மாமாவுக்குச் சொல்லியிருக்க வேணும் .... பாவமெண்டு விட்ட நான்......*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசர் மீண்டும் செருமிக் கொண்டு கதிரைக்குள் திரும்பிப்படுத்தார். குமார் ஓடிப்போய் சாரதாவின் வாயைப் பொத்தினான். அவள் சிரித்தபடி தன்னை விடுவித்துக் கொண்டு படுக்கையறையை நோக்கி ஓடினாள். அவனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

குட்டித் தூக்கத்திலிருந்த முருகேசர் கோழிச்சத்தத்தைக் கேட்டு கண் விழித்தார். கூட்டுக்குள் சேவல் அசதியில் படுத்திருக்க, பேட்டுக் கோழி எதையோ நினைத்துக் கொண்டு குஷியாக வெளியில் ஓடியது. அவர் தனக்குள்ளாகச் சிரித்தபடி மீண்டும் கண்களை மூடிக் கொண்டு 'சும்மா' படுத்தார்.

◇◇◇◇◇

காலங்கள் தான் எவ்வளவு வேகமாகப் போகின்றன. அவற்றிற்கு ஈடுகொடுத்து சமாந்தரமாகப் பயணிக்க இந்தக்கால விஞ்ஞான யுக மனிதனாலுமே முடியாமல் உள்ளது. பவானி படிப்படியாகக் கவலைகளை மறக்கத் தொடங்கியிருந்தாள். நாளடைவில் புதிய பாடசாலையும் அவளுக்குப் பிடித்துப் போயிற்று. கடமையில் ஒழுங்காக இருந்ததனால் அவள் அதிபரின் நம்பிக்கையையும் பெற்றிருந்தாள்.

ஆசிரியர்கள்.....!
சிறார்களைச் செப்பனிடும் சிற்பிகள்....!
புறாக்களாய் மனங்களில்
சாந்தம் விதைப்பவர்கள்.....
அதே வேளை
மறக்குலப் பண்புகளையும்
மறக்காது அளிப்பவர்கள்.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளைகளே.... எல்லாரும் அமைதியாய் இருங்கோ..... உங்களில் எத்தனைபேர் புகைவண்டியைப் பார்த்திருக்கிறீர்கள் பார்த்தவர்கள் எழுந்து நில்லுங்கள்"

நாற்பது பேரைக் கொண்ட அந்த எட்டாந்தர வகுப்பில் கோபு, டிலக்ஷி ஆகிய இரண்டு பேர் மட்டுமே எழுந்து நின்றார்கள்.

கோபு... நீங்க புகைவண்டியை எங்க பார்த்தீங்க.....?

ரீ.வி யில பார்த்த நான் ரீச்சர்........

சரி... சரி..... அவள் சிரிப்பை அடக்கிக்கொண்டு அவனை உட்காரச் சொன்னாள். அவனுடைய முகத்தில் தெரிந்த ஏமாற்றத்தைக் கண்டதும் அவளும் வெளியே தெரியாதவாறு வேதனைப்பட்டாள்.

டிலக்ஷி நீங்க சொல்லுங்க... புகைவண்டியை எங்கே பார்த்தீங்க....

நாங்க கொழும்புக்குப் போன நேரம் பாத்த ரீச்சர்.....

அது சரி....... கொழும்புக்கு ஏன் போன நீங்க.....?

எங்கட அப்பாவுக்குச் சுகமில்லாம கொழும்பு பெரியாஸ்பத் திரிக்குக் கொண்டு போன நாங்க..... அப்ப அம்மாவோட நானும் போன நான்..... அந்த நேரம்... வவுனியாவில இருந்து புகைவண்டியில்தான் போனம்

சரி.... இப்ப உங்கட அப்பாவுக்குச் சுகமா....? அவர் எப்படி இருக்கார்....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் செத்துப் போயிட்டார் ரீச்சர்... பாஸ் எடுக்கப் பிந்தினதால கொழும்புக்குப் போகப் பிந்திப் போச்சு.... அதால செத்துப் போன அப்பாவ இஞ்சையும் கொண்டு வர ஏலாம கொழும்புலேயே புதைச்சிப் போட்டு நானும் அம்மாவும் மட்டும் ஊருக்கு வந்திற்றம்.... இப்ப நானும் அம்மாவும் மட்டும்தான் வீட்டில இருக்கிறம்......

சரி.... சரி..... இருங்கோ........

அந்த நேரம் பணியாள் வந்து, எல்லா ஆசிரியர்களையும் அதிபர் தனது அறைக்கு அழைப்பதாகக் கூற, பவானியும் பாடத்தை இடையில் நிறுத்திவிட்டு எழுந்து போனாள். அதிபர் சொன்ன அந்த முக்கிய விடயத்தைக் கேட்ட அவர்களுக்கு தலையில் இடி விழுந்ததைப் போல் இருந்தது.

◈◈◈◈◈

உமக்கென்ன விசரா பிள்ள......?

கிளிநொச்சி, முல்லைத்தீவுக்குள்ள இராணுவம் வர ஏலுமே.....?

இயக்கம் விடுமா......? இல்ல..... உலக நாடுகள்தான் விடுமா....?

இவையின்ர கூத்துக்களைப் பார்த்துக் கொண்டு தமிழ் நாட்டு மக்கள் சும்மா இருப்பினமா.......?

அவசரப்படாதேயுங்கோ அண்ணா.... எங்கட அதிபர் தான் சொன்னவர்... அவரும் சும்மா சொல்ல மாட்டார்.. அதால நாங்களும் எதற்கும் ஆயத்தமாகத்தான் இருக்க வேணும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமடா தம்பி.... அவளும் கேள்விப்பட்டதத்தானே சொல்லுறாள்.... நாமளும் முன்னேற்பாடாக, நம்மட வடிவேல் மச்சானின்ர புளியம் பொக்கணைக் காணிக்குள்ள ஒரு கொட்டிலப் போட்டு வைப்பம்..... எதுக்கும் உதவும்....

*வடிவேல் மாமா, சுரேஷ் மச்சானுக்கு பவானியப் பெண் கேட்டு வந்து அது சரி வராததால கோபமாப் போனவர். இப்ப கனகாலமா இஞ்சால இல்ல... நாமளும் அவரப் போய் பாக்கல்ல... இப்ப என்ன சொல்லுவாரோ தெரியாது....*

அதுகளெல்லாம் பழைய கத..... அதையெல்லாம் விட்டுப் போட்டு இப்ப நீங்க மாமா சொல்லுறதக் கேட்டு ஒழுங்காக புளியம் பொக்காணக்குப் போய் வாங்கோ....

◈◈◈◈◈

கேற்றடியில் நாய் விட்டு விட்டுக் குரைத்துக் கொண்டிருந் தது. பூமரத்துக்குப் 'பாத்தி' பிடிச்சுக் கொண்டிருந்த தியாகு எழும்பிப் போனான். அவனுக்குத் தெரியும், அது விட்டு விட்டு குரைத்தால் வந்தவர் ஐயாவின்ர கூட்டாளி அருளம்பலத் தாராகத் தான் இருக்குமெண்டு. அவன் நினைத்தது போலவே இடதுகையில் ஒரு பேப்பரை இடுக்கிக் கொண்டு அருளம்பலத் தார் உள்ளே வந்தார்.

ஹோலுக்குள் வந்ததும் வராததுமாக கொண்டு வந்திருந்த வீரகேசரிப் பத்திரிகையின் தலைப்புச் செய்தியை மணியத்தாரிடம் காட்டினார்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து வன்னியை முற்றாக விடுவிக்க அரசு தீர்மானம். இன்னும் சில நாட்களில் நடவடிக்கைகள் ஆரம்பம்... இந்நடவடிக்கைகள் பொதுமக்களைப் பாதிக்கா தவாறு அமையுமென ஜனாதிபதி உறுதி.....'

உவங்கள் எல்லாமாச் சேர்ந்து சனத்தையல்லோ அழிக்கப் போறாங்கள்..... 1948 இல வெள்ளைக்காரனிட்ட இருந்து இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து தமிழர்ர பிரச்சினையும் இருந்து கொண்டே இருக்குது. இன்னும் ஒரு தீர்வு வந்தபாடில்ல... பிறகு 1949 இல பொன்னம்பலத்தின்ர காங்கிரசில இருந்து செல்வநாயகம் பிரிஞ்சதோட இந்தப் பிரச்சினை பெரிசாப் போச்சு......

*அதுக்கு என்ன செய்யிறது.....? அந்த மனிசனும் கடும் போக்க கொஞ்சம் குறைச்சிருக்கலாம். சிங்கள அரசுகளோட அவர் இன்னும் சில காலம் அனுசரிச்சுப் போயிருக்கலாம்....*

அதுக்குக் காலம் கடந்து போச்சுது. பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம் எல்லாம் நம்மள ஏமாத்திப் போட்டுது... சத்தியாக் கிரகம், அஹிம்சைப் போராட்டம் எல்லாம் தோல்வியில் முடிஞ்ச பிறகுதானே பெடியள் ஆயுதம் ஏந்தினவை......

*ஓமோம் எனக்கும் தெரியும் தான்... அதிகாரத்தில இருக்கிறவையல்லோ நமக்கும் ஏதும் தரவேணும்.... அவைக்கு ஒண்டும் தரவிருப்பமில்ல... எல்லாம் நம்மட கஷ்ட காலம் தான்....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நாட்களாக அந்தப் பகுதியை அதிரவைத்துக் கொண்டிருந்த டும்ம்....... டும்ம்....... டும்ம்...... சத்தங்கள் இன்னும் முழுசாக ஓயவில்லை. காதுகளைக் கிழித்துக் கொண்டு இடியோசையுடன் வந்து விழும் எறிகணைகளால் வன்னியின் ஒருபகுதி நிலத்தை மனிதக்குருதி நனைத்திருந்தது. மிதமிஞ்சிய குருதி மண்ணிலிருந்து வடிந்து கடலிலும் கலந்ததாலோ என்னவோ காலைச் சூரியன் கடும் சிவப்பு நிறத்தில் உதயமா கியிருந்ததான். விருட்சங்களில் காணப்பட்ட எஞ்சியிருந்த பறவைகளும் புலரும் பொழுதுக்கு கட்டியம் கூறி வரவேற் பதை மறந்து குஞ்சுகளுடன் வெளியேற ஆயத்தமாகிக் கொண்டிருந்தன.

இயக்கப் பெடியள் ராத்திரி விற்றோ பண்ணிப் போயிட்டினமாம்......

ஊருக்குள்ள இராணுவம் வரப் போகுதாம்.........

*நேற்றைக்கே அவையள் போறதாச் சொல்லிப் போட்டினம்.......*

*நாங்களும் சனத்தோட சனமாகப் போவம்.....*

காலை இருள் முற்றாக நீங்கவில்லை. பொழுதும் அரை குறையாகவே விடிந்திருந்தது போராட்டதைப் போல. முக்கியமான சாமான்களை மட்டும் எடுத்துக் கொண்டு சனங்கள் 'சாரி சாரி' யாக இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள் எனப் பலதரப்பட்ட வாகனங் களிலும் அவர்கள் அள்ளுப்பட்டுப் போய்க் கொண்டிருந்தனர். வசதியான சிலர் 'ட்ராக்ரர்களில்' பொருட்களை ஏற்றிக் கொண்டு போனார்கள். அந்நியப்படைகளுக் கஞ்சி அகதிகளாக வேற்று நாட்டுக்கு ஓடித்தப்புவதைப் போல் அவர்கள் போய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதைப் பார்க்கப் பாவமாக இருந்தது. எங்கே போவது..... எவ்விடத்தில் தங்குவது... இலக்கற்ற இந்தப் பயணம் எப்போது முடிவடையும்......? எதுவுமே தெரியாமல் காட்டுப் பாதையூடாக அவர்கள் போய்க் கொண்டே இருந்தார்கள்.

இந்த ஆரவாரங்களிலிருந்து முருகேசருடைய வீடும் தப்பவில்லை. அவர்களும் அதற்குரிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தனர். ஆனால் முருகேசர் மட்டும் வீட்டை விட்டு வெளியே போக கடைசிவரைக்கும் இணங்காத வராகவே இருந்தார்.

நான் இந்த வயசில உங்களோட வந்து என்ன செய்யப் போறன்... அதோட வருத்தக்காரன்.... நீங்க எல்லாரும் பாதுகாப்பாக போங்க..... சாரதா கவனம்.... வாயும் வயிறுமாக இருக்கா.... சின்னவள் உமாவையும் பார்த்துக்குங்க. பவானி உஷாராக இருக்க வேணும்....

உங்களுக்கு என்ன பைத்தியமா அப்பா....? உங்கள விட்டுப் போட்டு நாங்கள் போவமா....? உங்களுக்கு விருப்பமில்லாட்டி எல்லாரும் ஒன்றாகவே வீட்டில இருந்து செத்துப் போவம்.....

கிபீர் விமானமொன்று உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. முறிகண்டிப் பக்கம் காதுகளைப் பிளக்கும் சத்தத்துடன் குண்டுகள் விழுந்து கொண்டிருந்தன. அதே திசையில் எறிகணை வீச்சுக்களின் ஓசையும் விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்ததால் சனங்கள் பீதியுடன் கூடிய பதட்ட நிலையில் காணப்பட்டனர். அந்தப் பகுதியிலிருந்த மொத்தக் கிராமங் களுமே அங்கிருக்கும் எண்ணத்தைக் கைவிட்டு இடம் பெயர ஆரம்பித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசரைப் பலவந்தமாக பிடித்து ஏற்றிக் கொண்டு ஆட்டோவை 'ஸ்டாட்' செய்தான் குமார். தனது வீட்டையே பார்த்துக் கொண்டு ஏக்கப் பெருமூச்சொன்றை விட்டார் அவர். தங்கள் வீட்டைப் பார்ப்பது அதுதான் கடைசித் தடவை என்பதை முருகேசர் மட்டுமல்ல, மற்றவர்களும் கூட அதனை அப்போது அறிந்திருக்க மாட்டார்கள். என்ன விலை கொடுத்தேனும் இயக்கத்தினர் தமது பிரதேசத்தைக் காப்பாற்று வரெனவே அவர்கள் அவ்வேளையில் நம்பினர். இதை வழமையான தற்காலிக இடப் பெயர்வாகவே பெரும்பாலான மக்கள் கருதினர். அதனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் உடமைகளை தங்களுடன் எடுத்துச் செல்வதிலும் கவனக்குறைவாகவே இருந்தனர்.

குமார் ஆட்டோவைக் கிளப்ப ஆயத்தமான போதுதான் திடீரென எதையோ நினைத்துக் கொண்டு முருகேசர் அவசர அவசரமாக இறங்கியபடி வீட்டைநோக்கி நடக்க ஆரம்பித்தார். குமாரும் அவரைப்பின் தொடர்ந்து போனான். வீட்டுக்குள் போன அவர் ஏதோ பேப்பரை எடுத்து தனது சட்டைப் பைக்குள் மடித்து வைத்துக் கொண்டு, அதே வேகத்தில் திரும்பி வந்து ஆட்டோவில் ஏறி அமர்ந்தார். எறிகணை வீச்சுச் சத்தங்கள் நகரை நோக்கி முன்னேறிய வண்ணம் இருந்தன. அதனால் பொதுச் சந்தைப் பக்கம் தாக்குதல்கள் நடை பெறுவதை ஊகிக்கக் கூடியதாக இருந்தது. அதற்கு மேலும் அவ்விடத்தில் தாமதிக்க விரும்பாத குமார் தனது ஆட்டோவைச் சனக் கூட்டத்திற்குள் நுழைய விட்டான். அது புளியம் பொக்கானையை நோக்கியபடி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்து வளர்ந்து நேற்றுவரை செல்வாக்கோடு மகிழ்ச்சியாக வாழ்ந்த வீட்டை விட்டு இத்தனை சுலபமாக வெளியேறு கின்றோமென்ற கவலை முருகேசரை வாட்டியது படிப்பை முடித்து ஆசிரியத் தொழில் பெற்று மனைவி பிள்ளைகளுடன் அந்த வீட்டில் வாழ்ந்த இன்பமான நாட்கள் அவர் மனத்திரையில் ஓடத் தொடங்கின. பெண்களுக்கு, வீட்டுடன் சீதனமும் கொடுத்துத் திருமணம் முடித்துவைக்கும் யாழ்ப்பாண மக்களின் பாரம் பரியத்துக்கு மாறாக, தனது தகப்பனார் வீடோ சீதனமோ எதுவுமில்லாமல் தனது மருமகளை அவருக்குக் கட்டி வைத்ததை ஒருதடவை நினைத் துப்பார்த்தார். வாழ்க்கையில் கஷ்டப்படாமல் தான் நல்லாக இருக்க வேண்டு மென்று நினைத்து தனக்காக அவர்பட்ட கஷ்டங் களெல்லாம் முருகேசருக்கு ஞாபகம் வந்தது. அந்த பரம்பரைச் சொத்தைப் பத்திரமாகத் தனது பிள்ளைகளுக்கு கையளிக்க முடியாமல் போனதையிட்டு அவர் வேதனையடைந்தார்.

ஐந்து ஊர்களைக் கேட்டு அதன் பின்னர் ஐந்து வீடு களையாவது கேட்டு எதுவுமே கிடையாத நிலையில்தான் பாரதத்தில் பாண்டவர்கள் சண்டையை ஆரம்பித்தார்கள், அதில் வெற்றியும் பெற்றார்கள். நாமோ இங்கு யுத்தத்தைத் தொடங்கியபின்னர்தான் குடியிருந்த வீடுகளையும் சொந்த ஊர்களையும் விட்டு ஓடிக் கொண்டிருக்கிறோம். ஆரம்பத்தில் ஒன்றுமே தரமுடியாதென்ற மறுத்த கௌரவர்கள் யுத்தத்தின் இறுதியில் அனைத்தையுமே இழந்து வீதிக்கு வருகிறார்கள். எங்களுக்கும் உரிமையைத் தந்து, எங்களையும் நிம்மதியாக வாழ விடுங்களென்று கேட்ட நாமோ இருந்ததையுமிழந்து இப்போது வீதியில் நிற்கின்றோம்.

வெட்டி விடப்பட்ட முகத்துவாரத்தில் வேகமாக ஓடும் ஆற்று வெள்ளத்தைப் போல், மக்கள் கூட்டம் காட்டு வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும் நெரிசலாகப் போய்க் கொண்டிருந்தது. இவர்களின் ஆட்டோவும் அதற்குள் புகுந்து ஊர்ந்து கொண்டிருந்தது. முருகேசர் ஒரு கையினால் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு கண்களை மூடியபடி இருந்தார். அவருடைய உடல் வழமைக்கு மாறான விதத்தில் வியர்ந்திருந்தது. ஒருபக்கத்தோளில் அவரை அணைத்தபடி பவானி கவலை தோய்ந்த முகத்துடன் இருந்தாள்.

சுட்டெரிக்கும் வெயிலின் கடுமை தணிந்திருந்த போதும் தென்னந்தோட்டத்து நிழல்களையும் ஊடறுத்து அனல்காற்று வீசிக் கொண்டிருந்தது. எறிகணை வீச்சுச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுக்களின் ஒலிகளும் தூரத்தே கேட்ட வண்ணமே இருந்தன. காட்டுப் பாதையின் ஓரங்களில், அதிகமானவர்கள் வாகனங்களை நிறுத்தியபடி, அங்குமிங்கும் கூட்டங் கூட்டமாக நின்றனர். சிலர் தேனீர் வைத்துக் கொண்டிருக்க, இன்னும் சிலர் சமைத்துக் கொண்டிருந்தனர். குமாரும் தனது ஆட்டோவை வீதியோரமாக ஒரு இடத்தில் நிறுத்தினான். சிறிது நேரத்தில் அவ்விடத்தில் மண் வெட்டியால் வெட்டி ஒரு அடுப்பை உண்டாக்கி அவனும் தேனீர் தயாரித்தான். குளிசைகளுடன் சற்று முன்னர் அருந்திய தேனீரையும் முருகேசர் வாந்தி எடுத்தார். அவருடைய உடல் நிலை மோசமடைந்து கொண்டிருந்தது. ஆனாலும் உடன டியாக அவரைக் கொண்டுபோய் மருந்து எடுக்கக் கூடிய ஆஸ்பத்திரியோ, அதற்கான சூழ்நிலையோ இல்லாமையினால் மற்றவர்களைப் போல, அவர்களும் பிற்பகல் வேளையில் தங்கள் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள்.

இரவு எட்டரை மணியளவில் புளியம் பொக்கணையை அவர்கள் அடைந்தார்கள். அங்கே ஒரு இடத்தில் வடிவேல் மாமாவின் மகன் சுரேஷ் இவர்களுக்காகக் காத்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களில் பெரும்பாலானவர்கள் விரும்பிய இடங்களில், தங்கள் வசதிக்கேற்றபடி தரப்பாளைக் கட்டி கொட்டில்களை அமைத்திருந்தார்கள். அந்தக் கொட்டில்களுக்கு மூடுபங்கர் களையும் அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். சுரேஷ் ஏற்கனவே அமைத்திருந்த கொட்டில்களுக்கு இவர்களைக் கொண்டுபோய் சேர்ப்பித்தான். அந்தக் கொட்டிலுக்குள் பாதுகாப்பான 'பங்கரும்' இருந்தது. தகப்பனாரை மெதுவாக இறக்கிய குமார் அவரைப் பங்கருக்குள் வசதியாகப் படுக்க வைத்தான். சாரதாவும், உமாவும் அவருக்குப் பக்கத்தில் இருக்க, பவானி குமாருடன் மேலே வந்து சமைக்க ஆரம்பித்தாள். சுரேஷ் உறவினர்களைப் பற்றி அவர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்த போது, ஒரு மோட்டார் சைக்கிள் வர அவன் அதில் ஏறிப்போனான். பவானி ஒரு கேள்விக் குறியோடு குமாரின் முகத்தைப் பார்த்தாள்.

குப்பி விளக்கின் சுடர் காற்று வீசும் திசைக்கெல்லாம் மாறி மாறி அசைந்து கொண்டு, மனித வாழ்வின் நிலையா மையை நினைவுபடுத்திக் கொண்டிருந்தது. தரப்பாளொன்றை நிலத்தில் விரித்துவிட்டு, அதன் மிகுதிப் பகுதியால் பங்கரின் ஒருபக்கத்தை மூடிவிட்டிருந்தான் குமார். முருகேசரின் நெஞ்சுவலி குறைவடைய வில்லை. படுத்திருந்த அவரின் நெஞ்சைத் தடவியபடி யோசனையில் உட்கார்ந்திருந்தான் அவன். உமா சிறுநீர் கழிப்பதற்கு வெளியில் போவதற்காக பவானியை அழைத்தாள். பங்கருக்கு மேலே வந்து சற்றுத் தூரத்தில் அவளைக் கொண்டு போய் விட்டபோதும், திறந்த வெளியில் போவதற்கு மறுத்தபடி அவள் அடம்பிடித் தாள். அவளைச் சமாதானப்படுத்தியபடி, வெளியில் அவளுடன் சேர்ந்து கதைத்தபடியே பவானியும் குந்தியிருந்து சிறுநீர் கழித்தாள். அந்த நேரத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளோடு இருளாக வந்து அவர்களுடைய கொட்டிலுக்குச் சமீபத்தில் நின்றன. அதிலிருந்து இரண்டு பேர் இறங்கிப் பக்கத்துக் கொட்டிலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

உமாவின் கையைப் பிடித்துக் கொண்டு வேமாகச் சென்ற பவானி தங்கள் பங்கருக்குள் இறங்கிக் கொண்டாள். உள்ளே போன அவள் அதே வேகத்தில் குமாரிடம் விசயத்தைச் சொன்னாள். சற்று நேரத்தில் பக்கத்துக் கொட்டில்களிலிருந்து அழுகுரல் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. மடியிலிருந்த முருகேசரின் தலையை மெதுவாக பவானியின் மடிக்கு மாற்றிவிட்டு மேலே ஏறி பதுங்கியிருந்து நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான் குமார். போராளிகள் எனச் சொல்லப்படுவோர் ஒரு இளைஞனை இயக்கத்திற்காகப் பிடித்துப் போனதால், அவனுடைய தாய் வாயிலும் வயிற்றிலும் அடித்து ஒப்பாரிவைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஆறுதல் சொல்லக் கூட அந்த இடத்தில் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. வயது போன சில ஆண்களும் பெண்களும் மட்டுமே அங்கு காணப்பட்டனர். அதைப் பார்த்துக் கொண்டு அவன் எவ்வளவு நேரம் இருந்தானோ தெரிய வில்லை, மெல்ல மெல்ல விடிந்து கொண்டிருந்தது.

பக்கத்துத் தென்னந் தோப்புக்குள் காலைக் கடன்களை முடித்த அவன், 'பிளாஸ்ரிக்' வாளியில் தண்ணீர் பிடித்து வைத்துவிட்டு மற்றவர்களை எழுப்பிவிட பங்கருக்குள் இறங்கிப் போனான். நான்கு பேரும் நான்கு விதமாகப் படுத்திருந்தார்கள். சாரதா வேதனையில் பிதற்றிக் கொண்டிருந்தாள். உமாவை அணைத்தபடி பவானி பங்கரின் ஒரு ஓரமாகப் படுத்திருந்தாள். வீட்டில் நீட்டி நிமிர்ந்து படுக்கும் முருகேசர் இடம் போதாமை யால் இறாலைப் போல் அரை வட்டமாகச் சுருண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திருந்தார். அவருடைய 'சேட்' பையில் ஒரு துண்டுக் காகிதம் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. அது அவர் கடைசியாக வீட்டிலிருந்து வரும் போது எடுத்து வைத்ததாக இருக்க வேண்டும். அதனை அறியும் ஆவலுடன் எடுத்தான். அது அவர் வழக்கமாகப் படிக்கும் 'பாயும் புலி பண்டார வன்னியன்' புத்தகத்திலிருந்து அவரால் பிரதி பண்ணப்பட்ட கலைஞரின் கவிதை யொன்றாகும்.

வாழ்வையே போராட்டமாகக் கொண்டு
வாழ்கின்ற மனிதன்
காரிருளில் மின்னல் ஒளி கண்டு
களிப்படைகிறான்.....
அந்த மின்னலுடன் பின்னிக் கொண்டு
அவன் தலையில் இடியொன்றும் வீழ்ந்துவிட,
அதிலும் சாகாமல் பிழைத்துக் கொண்டு
அக்கினியைப் புசித்தன்றோ வாழ்கின்றான் !
உடனிருந்து உயிர்தருகின்றேன் என ஒப்பி வந்தவரே சிலர்
உடன் பிறந்தே கொல்லும் நோயாக மாறிவிட்டார்....
இதையெல்லாம் எதிர்த்து நிற்க எனக்கு
எதையும் தாங்கும் இதயம் யார் தருவார்.....?

அதனை மடித்துத் தனது பைக்குள் வைத்துக் கொண்டு, அவரைத் தட்டி எழுப்பக் கைகளைக் கொண்டு போனான். அவருடைய உடல் சில்லிட்டிருந்தது. அடுத்த கணம்... அவனுடைய அலறல் சத்தத்தைக் கேட்டு பதறியடித்துக் கொண்டு எல்லாரும் எழும்பினார்கள். முருகேசரின் உயிர் உடலை விட்டுப் பிரிந்திருந்தது. அவருக்கு அருகிலேயே ஒரு மூலையில் சாய்ந்தபடி அவன் அமர்ந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய கண்களிலிருந்து 'பொலபொல' வெனக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அவன் மூர்ச்சையாகிப் போனான். பவானியும் சிறு பிள்ளையைப் போல் தலையிலடித்துக் கொண்டு பெரிய சத்தமாக அழத் தொடங்கினாள். உமாவும் அவர்களுடன் சேர்ந்து கொள்ள, சாரதா அழுது கொண்டே அவர்களை ஆறுதல் படுத்துவதில் ஈடுபட்டாள்.

*"…..உறவினர்கள் எல்லாருக்கும் முடிந்தவரை சொல்லி அனுப்பியாயிற்று. அம்மாவின் மூத்த சகோதரரான கதிரவேலு மாமா நீண்ட நாட்களுக்குப் பிறகு வந்திருந்தார்…. பழைய கோபங்களயெல்லாம் அவர் மறந்து விட்டிருப்பார்போல…. அவர்தான் எல்லா வேலைகளையும் பொறுப்பெடுத்துச் செய்து கொண்டிருந்தார்… வசதிபடைத்தவரென்றபடியால் செலவுகளையும் அவரே செய்து கொண்டிருந்தார். அஞ்சலி பிரசுரம் அடித்துக் கொடுத்து பக்கத்து ஊர்களுக்கு ஒலிபெருக்கியில் அறிவிப்பதற்கும் ஒழுங்குகள் செய்தாயிற்று. சுடர் ஒளிப் பேப்பரிலும் மரண அறிவித்தல் போட சின்ன ஐயா ஏற்பாடு பண்ணியிருந்தார். அப்பாவுக்கு நேர் இளையவர் அவர்தான். சிறுவயதில் இருந்து அவரின் சீவியம் முழுவதும் கொழும்பிலதான்…. அப்பாவின்ர உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்த சனக் கூட்டத்தச் சொல்ல ஏலாது…. அவரிட்டப் படிச்ச பலர் இப்ப நல்ல நிலையில இருக்காங்க… கொஞ்ச நாள் அப்பா கந்தசுவாமி கோயில் தலைவராகவும் இருந்தவர்…. அதனாலதான் கோயிலாலயும் அஞ்சலி நோட்டீஸ் அடிச்சவய…. இன்னும் நிறையச் சனங்கள் வர இருக்கிறதால, பிரேதத்த நாளைக்குத் தான் எடுக்கிறதா ஏற்பாடு….."*

குமார் மயக்கம் தெளிந்து கண்விழித்துப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'...... இஞ்சாருங்கோ.... என்னப்பா இன்னும் சின்னப்பிள்ளை மாதிரி..... எங்களுக்கெல்லாம் ஆறுதல் சொல்ல வேண்டிய நீங்களே இப்படியெண்டா..... பவானியையும், உமாவையும் பாருங்கோ.....' சாரதாவின் சத்தத்தில் குமார் சுய நினைவுக்குத் திரும்பினான். அவனுக்கு நிலைமை புரியத் தொடங்கியது. கண்களைத் துடைத்துக் கொண்டு பங்கருக்கு மேலே வந்து சுற்று முற்றும் பார்த்தான். பக்கத்துக் கொட்டில்களில் இருந்தவர்கள் அவரவர் வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். மண்வெட்டியை எடுத்துக் கொண்டு சற்று தூரத்தில் அவன் குழி தோண்ட ஆரம்பித்தான்.

◈◈◈◈◈

பத்து நாட்கள் கழிந்த நிலையில் ஒரு நாள் மதியம் சுரேஷ் இவர்களைத் தேடிவந்தான். மாமனாரின் மறைவைக் கேட்டு அவனும் கவலைப்பட்டான். ஆனால் அதன் பின்னர் அவனுடைய பேச்சுக்களும் செயலும் அவர்களை எரிச்சலடைய வைத்தன. குமார் மட்டும் பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு அமைதியாக இருந்தான். அது பவானியை மேலும் சினமடைய வைத்தது.

பவானி... கோபத்தைக் கொஞ்சம் குறையும்..... அதுதான் பெண் பிள்ளைகளுக்கு நல்லது. உம்மிட கையால கொஞ்சம் குடிக்கத் தண்ணி தாரும்....

அவனுடைய முகத்தையே பார்க்க விரும்பாத பவானி ஒரு டம்ளரில் தண்ணீரை எடுத்து குமாரிடம் நீட்டினாள். குமார் அதனைச் சுரேஷுக்கு கொடுத்தான். சுரேஷ் குடித்துக் கொண்டே பேச்சைத் தொடர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தான் நல்லா யோசிச்சுப்பாருங்க.... இப்ப கலியாணம் கட்டாதவையெல்லாம் இயக்கம் பிடிக்குது...அதோட இன்னும் எவ்வளவு காலத்திற்கு பவானியை வச்சு உங்களால காப்பாத்த முடியும்....? அவவுக்கும் ஒரு வாழ்க்கை வேணும் தானே.....

அண்ண.... சும்மா வீண் கதையெல்லாம் இப்ப வேணாம் என்று சொல்லுங்க.... என்னுடைய வாழ்க்கையைப் பற்றி எனக்குத் தெரியும்.... உங்களுக்குக் கரைச்சல் என்றால் சொல்லுங்க உங்களவிட்டு இப்பவே நான் போயிருவன்...

கொஞ்சம் பொறு பிள்ளை.... கதைக்கிறதெல்லாம் செய்ய வேணுமெண்டா இருக்கு.... சுரேஷ் இப்ப நிலவரம் நல்லா இல்ல.... நீ போயிற்று பிறகு ஒரு நாளைக்கு வா... விபரமெல்லாம் சொல்லுறன்....

◈◈◈◈◈

புளியம்பொக்கனைக்கு வந்த பின்னர் இரண்டு பூரணைகள் போயிருந்தன. 'பங்கர்' வாழ்க்கை சனங்களுக்குப் பழகிப் போயிருந்தது. அந்த நிம்மதியையும் குலைக்கும் விதத்தில் அன்றைய பகற் பொழுதில் மிக உயரத்தில் விமானமொன்று பறந்து போனது சில மணி நேரத்தில் எறிகணைகள் மழைபோல் பொழிய ஆரம்பித்தன. அவர்களுக்குச் சற்றுத் தூரத்திலும் அவற்றில் பல விழுந்து வெடித்தன. சனங்களுடன் குமார் குடும்பத்தினரும் பங்கருக்குள் அடங்கிப் போனார்கள் தூரத்தில் மட்டுமின்றி, காதுக்கெட்டிய தூரத்திலிமிருந்து அழுகுரல் சத்தங்கள் தொடர்ந்து கேட்டவண்ணமிருந்தன. வெளியில் மட்டு மன்றி சில "பங்கர்"களுக்குள்ளும் எறிகணைகள் விழுந்து வெடித்தினால் அந்தப் பிரதேசம் முழுவதும் புகை மண்டலமாக காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பகலில் எறிகணை வீச்சுக்களின் வேகம் சற்றுக் குறைவடைந்திருந்தது. பங்கர்களை விட்டுச் சிலர் மேலே வந்து கிட்டிய பகுதிகளைப் பார்வையிட்டனர். குமாரும் அவர்களுடன் போனான். மரக்கிளைகள் பலவற்றில் சதைப்பிண்டங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றிலிருந்து கசாப்புக்கடையில் உரித்துத் தொங்க விடப்பட்டிருக்கும் இறைச்சிகளிலிருந்து வடிவதைப் போல் உதிரம் சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருந்தது. பல குடும்பங்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன. அவர்களில் குற்றுயிராகக் கிடந்தவர்களைக் கூட வைத்தியசாலைக்குக் கொண்டு போக முடியாத நிலை காணப்பட்டது. குற்றவாளிகளுக்கு கடுமையான த்ண்டனை வழங்கும் சில நாடுகளில் உள்ளது போல, தலைகள் துண்டாடப்பட்ட நிலையில் பல முண்டங்கள் ஆங்காங்கே கிடந்தன. அவற்றைச் சில நாய்கள் கடித்துக் குதறிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் கல்மனம் கொண்டவர்களும் கதறி அழுவார்கள் போல் இருந்தது. மனித உடல்களையும் சிதைவுகளையும் அப்படியே பங்கருக்குள் போட்டு மூடுவதற்கு மற்றவர்களுடன் சேர்ந்து குமாரும் உதவினான். அப்போது ஆளரவம் கேட்டு பங்கருக்குள் இருந்த ஒருவன் அவசரமாக வெளியேறி ஓட்டமெடுத்தான். அவனுடைய கையில் இரத்தம் தோய்ந்த நிலையில் தாலிக் கொடிகளும் இன்னும் சில நகைகளும் இருந்தன.

புளியம்பொக்கணையை நோக்கி அச்சொட்டாக அடிவிழத் தொடங்கி விட்டதால் இனி அந்த இடம் பாதுகாப்பானதாக இருக்கமாட்டாது எனப் பலரும் அபிப்பிராயப்பட்டனர். உடனடியாக உயிரைப் பாதுகாக்கும் நோக்குடன் அந்த இடத்தை விட்டு அனைவரும் கிளம்ப ஆரம்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரும் அன்றிரவு இடத்தைக் காலி செய்யத் தீர்மானித்தான். தற்காலிகமாக வந்து தங்கியவர்கள் மட்டுமன்றி, பரம்பரை பரம்பரையாகக் குடியிருந்தவர்களும் மனதுக்குள் அழுதபடி தங்கள் பெட்டி படுக்கைகளைக் கட்ட ஆரம்பித்தார்கள்.

◇◇◇◇◇

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்..... செய்திகள்....
முதலில் தலைப்புச் செய்திகள்.......
பாதுகாப்புப் படையினர் கிளிநொச்சிப் பகுதியில்
தொடர்ந்து முன்னேற்றம்....
பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது எல்.ரீ.ரீ.
பயங்கரவாதிகள் எறிகணை வீச்சு......
நூற்றுக் கணக்கானோர் பலி......
பெருந்தொகையானோர் காயம்......

இரவுச் சாப்பாட்டை முடித்து விட்டு சாய்மானக் கதிரையி லிருந்த மணியத்தார் உசாரானார்.

தம்பி.... இந்த ரேடியோவில சத்தத்தக் கொஞ்சம் கூட்டி வை...... இவங்கள் இப்படித்தான்....... அரசாங்கம் எவ்வளவு பாதுகாப்புக் கொடுத்தாலும் சனங்களை வீணாக் கொல்லுறாங்கள்.....

ஐயா..... நீங்கள் இந்தச் செய்திய நம்புறீங்களா...? புலிகள் இதைச் செய்திருப்பினமா....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வேற விஷயம் தம்பி... 1972 இல சிறிமாவோ அம்மையார் புதிய குடியரசு அரசியலமைப்பைக் கொண்டு வந்து தமிழர்ர தலையில கட்டினவ... அப்ப ஒருவரும் ஆயுதம் ஏந்தத் துணியல்ல.... ஆனா 1983 இல் ஜே.ஆர்ர ஆட்சியில நிலம மோசமாய்ப் போயிட்டுது.... பெரிய இனக் கலவரம் வந்து தமிழர்கள் பெருந்தொகையில உயிரிழந்தவய... அதோட தமிழரிட பெருமளவு சொத்துக்களும் அழிஞ்சு போக அவர்கள் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்கு பாதுகாப்புத் தேடிப் போகத் தொடங்கினாங்க... இண்டைக்கு வரைக்கும் இது தொடருது.. இப்ப இலட்சக் கணக்கிலயல்லோ நம்மட சனம் புலம் பெயர்ந்து வாழுதுகள்..

*சரி....ஐயா இண்டைக்குப் போதும்.... என்னை விடுங்கோ நான் படுக்கப் போறன்....*

◈◈◈◈◈

வன்னி மண்ணின் வளமிக்க பிரதேசங்களான கிளிநொச்சி, முல்லை மாவட்டங்கள் வடபகுதியின் உணவுக் களஞ்சியங் களாகும். செழிப்பான தென்னந் தோட்டங்களும், சில மைல் தூரத்தில் செந்நெல் வயல்களும், சுத்தமான கடல் காற்றும், சூழவுள்ள பெருங் காடுகளும், அவற்றின் அழகிற்குப் பெருமை சேர்ப்பன. பஞ்சமென்பதே இப்பிரதேச மக்கள் அறியாததொன்று.... கல்லில்லாத குத்தரிசியும், கறி சமைப் பதற்கு கணவா, நண்டு, மீன் வகைகளும் கணக் கில்லாமல் இங்கே கிடைக்கும். வேலையற்றோர் இங்கு யாருமில்லை... அது வன்னிப் பிரதேச அகராதியில் இல்லாத சொல்...

இத்தனை செல்வங்களுமடங்கிய அந்தச் சின்னஞ் சிறு நிலப்பரப்பு சண்டையின் கோரப்பிடிக்குள் சிக்கிச் சின்னா பின்னமாகி அழிந்து கொண்டிருந்தது. செயற்கையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுத் தட்டுப்பாட்டால் பஞ்சத்தைப் பலரும் முதல் தடவையாக அனுபவித்தனர். இடப் பெயர்வுகளால் பாதிக்கப் பட்ட பலரும் செய்தொழிலின்றி பணப் பற்றாக்குறையால் அவதியுற்றனர். விசுவமடு, மூங்கிலாறு, உடையார்கட்டு, இருட்டுமடு ஆகிய இடங்களெல்லாம் இடம் பெயர்ந்த மக்கள் நிரம்பி வழிந்தனர்.

அதிகாலை இரண்டு மணி கடந்திருக்கும். எங்கிருந்தோ சில்லூறு வண்டுகள் இரைந்து கொண்டிருந்தன. நாய்கள் சில ஊளையிட்டுக் கொண்டிருக்க, வேறு சில வீராப்புடன் குரைத்துக் கொண்டிருந்தன. குளிர்காற்று வீசிக் கொண்டிருந்த போதும் யாரும் கூதலால் நடுங்கியதாகத் தெரியவில்லை. பயணித்துக் கொண்டிருந்த பலர் தங்கள் வாகனங்களை அவரவர் விரும்பிய இடங்களில் நிறுத்திக் கொண்டு இறங்கினார்கள். நடந்து வந்தவர்களும், அவர்களுக்கு விரும்பிய இடங்களில் கொட்டில்களை அமைத்து தங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்கள் அது 'இருட்டுமடு' என்னும் சிறிய கிராமம்.

குமாரும் வசதியான ஒரு இடத்தில் ஆட்டோவை நிறுத்தினான். புற்காடுகள் நிறைந்த அந்த இடத்தைத் துப்பரவு பண்ணிவிட்டு பவானியின் உதவியுடன் தரப்பாளைக் கட்டினான். சாரதாவுக்கு இடுப்புவலி கண்டிருந்தது. அவள் வேதனையை வெளிக்காட்டாமல் மெதுவாக அனுகிக் கொண்டிருந்தாள். ஆனாலும் அவளுடைய முகம் அதனை வெளிச்சம் போட்டுக் காட்டியது. பவானி தேனீர் வைப்பதற்கு ஆயத்தமாக, குமார் பங்கர் வெட்ட ஆரம்பித்தான். அந்த வேளையில் அவர்களுக்குச் சமீபத்தில் அழுகுரல் சத்தங்கள் கேட்க ஆரம்பித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'...... என்ர ராசாவே நீர் என்னை விட்டுப் போயிற்றீரா...... அவங்களுக்குத் தெரியாம உம்ம பொத்திப் பொத்தி மடிக்குள்ள வச்சிருந்தனே... அவையிற்ற இருந்து பாதுகாத்து இப்ப என்ர செல்லத்த இந்தப் பாம்புக்கு பலி கொடுத்திற்றனே.

கூட்டத்தினரை விலக்கிவிட்டு உள்ளே போய் எட்டிப் பார்த்தாள் பவானி. பதின்மூன்று வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவனின் உடல் நிலத்தில் கிடத்தப் பட்டிருந்தது. பக்கத்தில் ஒரு பெரிய பாம்பை அடித்துப் போட்டிருந்தார்கள். அது விஷப் புடையனென்று ஒரு பெரியவர் மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

சிறுவனுக்கு சமீபத்தில் போய் மீண்டும் ஒரு தடவை அவனின் முகத்தைப் பார்த்த பவானி கையை வாயில் வைத்தபடி அழத் தொடங்கினாள். அந்த உடல் அவளுடைய வகுப்பு மாணவனான 'கோபு'வுடையது.

◈◈◈◈◈

சாரதாவின் வயிற்று வலி கூடிக் கொண்டே இருந்தது. அவளுக்குத் தெரியும், இது பெறுமாதமெண்டு. குமாரின் முகம் பயத்தினால் வெளிறியிருந்தது. அவன் அதனை வெளிக்காட்டா விட்டாலும் அவனுடைய உடலுக்கும் தைரியத்திற்கும் தொடர்பில்லையென்பது சாரதாவிற்கு மட்டுமே தெரிந்த விசயம். பவானி உமாவுடன் கதைத்தபடி பருப்பில் கிடந்த கற்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரம் கிளிநொச்சி நகரப்பக்கம் விமானம் குண்டுகள் போடும் சத்தம் பெரிதாகக் கேட்டது. சற்றும் எதிர்பாராதவாறு அவர்களிருந்த கொட்டிலை உரசியபடி ஒரு எறிகணை சற்றுத் தூரத்தில் விழுந்து பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. அதன் தொடர்ச்சியாக வேறு எறிகணைகள் வராதபோதும் எல்லோரும் அரைநாளாக பங்கருக்குள்ளேயே அடைந்து கிடந்தனர்.

பிற்பகல் வேளை, அண்ணளவாக மணி ஐந்து இருக்கலாம். குமார் தேனீர் போட்டுக் கொண்டிருந்தான். அவ்வேளையில் 'டம்ளர்' களைக் கழுவிக் கொண்டிருந்த பவானியைக் கூப்பிட்டு. காதுக்குள் சாரதா ஏதோ சொல்ல அவள் அவசரமாக வெளியில் ஓடினாள். பின்னர், குமாரை அழைத்த சாரதா தனக்கு 'இரத்தப் போக்கு' இருப்பதாகச் சொன்னாள். அவளை எதுவிதத்திலும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல அவன் முயற்சித்த போதும் அதற்கான கால அவகாசம் கிடைக்கவில்லை. சிறிது நேரத்தில் வெளியேபோன பவானி ஒரு மூதாட்டியுடன் வந்து, அவசர அவசரமாக பங்கருக்குள் இறங்கிப் போனாள்.

அடுத்து என்ன நடக்குமென்று தெரியாத நிலையில் கைகளைப் பிசைந்தபடி, உமாவுடன் நேரத்தை ஓட்டிக் கொண்டிருந்தான் குமார். அரைமணி நேரத்தில் 'பங்கருக்' குள்ளிருந்து கேட்ட குழந்தையின் அழுகுரல் சத்தம் பிரசவம் முடிவடைந்ததை உறுதிப்படுத்திற்று. பவானி மலர்ந்த முகத்துடன் மேலே ஏறிவந்தாள்.

அண்ண.... ஆம்பிளப்பிள்ளை பிறந்திருக்கு.....
உமா உனக்குத் தம்பிப்பாப்பா வந்திருக்கான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய உரையாடல் முடிய முன்னரே மூதாட்டி உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள்.

'.......பிள்ள இங்க வா.....
இன்னும் மாக்கொடி விழல்ல...
இரத்தமும் கூடப் போகுது....
பழைய துணி வேணும்.....'

பழைய துணி அவர்களிடம் போதுமான அளவு இருக்கவில்லை. இருந்தவற்றுடன் சில நல்லதுணிகளையும் கிழித்துக் கொடுத்தாள் பவானி. குமார் பக்கத்துக் கொட்டில் களுக்கெல்லாம் ஓடினான். ஒரு மூலையில் ஒன்றுமே பேசாது பித்துப் பிடித்தவளைப் போல் ஒரு தாய் இருந்தாள். அவள் அவனிடம் விஷயத்தைக் கேட்டாள். கண் இமைக்கும் நேரத்தில் அவள் எழுந்து நின்று தனது சேலையை உரிந்து அவனிடம் சுருட்டியபடி கொடுத்தாள். உள் பாவாடைமட்டும் அவளுடைய மானத்தை மறைத்துக் கொண்டிருந்தது. அவள் இயக்கத்தினரிடம் தனது பிள்ளையைப் பறிகொடுத்த தாய்....

துணியை எடுத்துக் கொண்டு ஓடிவந்த குமார் கொட்டிலடியில் அழுகைச் சத்தம் கேட்டதனால் பதட்ட மடைந்தான். பங்கருக்கு வெளியே குழந்தையை வைத்துத் துப்பரவு பண்ணிக் கொண்டிருந்தாள் மூதாட்டி. உள்ளே எல்லாம் முடிந்துவிட்டிருந்தது. உமாவும், பவானியும் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்கள். சாரதாவின் இமைகள் மூடியிருந்தன. இரத்தக் குளத்தில் மூழ்கி இறந்தவளைப் போல் அவளுடைய உடல் உதிரத்தால் நனைந்திருந்தது. கொண்டு வந்த துணியைச் சுற்றி வளைத்துப் போட்டு, அவளுடைய உடலை நேராகத் தூக்கிக் கிடத்தினான். அவனுக்கு அழுகை வரவில்லை. பவானி அவனைப்பார்த்தாள். அவளுக்குப் பயம் பிடித்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தனது சட்டைப் பையில் வைத்திருந்த ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து முதல் வரியைப் படித்தான் '....வாழ்வையே போராட்டமாக்கிக் கொண்டு வாழ்கின்ற மனிதன்....'

அத்தியாவசியப் பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு மூவரும் வெளியே வந்தார்கள். தனது வாழ்க்கைத் துணையை பங்கருக்குள் வைத்து அப்படியே மண்ணை வெட்டி மூடினான் குமார். மனசு இறுக்கமாக இருந்தது. ஆளையாள் ஒருவரும் பேசிக்கொள்ளவில்லை. பொதுக் கிணற்றில் போய் முழுகினார்கள். மூதாட்டியிடமிருந்து பவானி குழந்தையை வாங்கிக் கொண்டாள். இவர்களின் பரிதாப நிலைகண்டு பக்கத்தில் இருந்த தனது கொட்டிலில் தேனீர் கொண்டு வந்து கொடுத்தாள். ஆனாலும் அதை அருந்துவதற்குரிய மனநிலையில் அவர்கள் இருக்கவில்லை.

வானம் இருட்டியிருந்தது மெல்லிசான மழைத் தூறலுடன் காற்றும் பலமாக வீசத் தொடங்கியது. குமாரை விட்டுத் தூக்கம் வெகு தொலைவிலிருந்தது. மனிதன் தனிமையிலிருந்து சிந்தனை வசப்படும் போதுதான் உணர்வுகளின் பிரதிபலிப்பை அறிய முடிகின்றது. ".... இரண்டாவது பிள்ளை ஆணாக இருந்தால் முறிகண்டிப் பிள்ளையாருக்குப் பொங்குவதாக சாரதா நேர்த்தி வைத்திருந்தாள். அவள் நேர்த்தி பலித்துவிட்டது. ஆனால் அவளுமல்லவா பலியாகிவிட்டாள். தாரமான நாள் முதல் தாயைப்போல் என்னைக் கவனித்து எனக்குப் பணிவிடை செய்து வந்த உத்தமியே.... பணியாளன் போல் என்னைப் பார்த்து வந்தாய்..... எனக்கு முன் நீ தூங்கி நான் கண்டதில்லை. அதை நான் கண்டதினத்தில் நீ உயிருடன் இல்லை.... என்னைத் தனியே விட்டுப் போய் விட்டாயே அம்மா... இனி எனக்கு ஆறுதல் சொல்ல யார் இருக்கிறார்கள்...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் கைகளை தலையில் அடித்துக் கொண்டு, தன்னை மறந்தவனாக சிறு பிள்ளையைப் போல் தேம்பி அழுது கொண்டிருந்தான். அந்தச் சத்தத்தில் பவானியும் எழும்பியிருந்தாள்..

அண்ண..... அழாதேயுங்கோ.....
நமக்கு இன்னும் என்னென்ன நடக்குமோ தெரியாது.....
உன்ர ரெண்டு பிள்ளைகளையும் நாம வளர்க்க
வேணும்.....
அண்ணி தீர்க்க சுமங்கலியாப் போய்ச் சேந்திட்டா.....
பவானி எனக்கு ரெண்டு பிள்ளைகள் மட்டு
மில்லையம்மா......
நீயும் என்ர பிள்ளைதான்......
உன்ர எதிர்காலம் என்னவெண்டுதான் இப்ப எனக்குக்
கவல.....

அதை விடுங்க அண்ண..... இப்போது இடம் பெயர்ந்து கொண்டிருக்கும் இந்த இலட்சக் கணக்கான மக்கள் படும் துன்பத்திற்கும் அளவே கிடையாது. ஆனால் யாருக்கு யார் ஆறுதல் கூறுவது... ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் இழப்புக்களைச் சந்தித்துத்தான் உள்ளது. வாழ்க்கைத் துணையை, பிள்ளைகளை, பெற்றோரை இழந்தவர்கள் ஏராளம்... ஊனமுற்றோரும், உறவினர்களை இழந்தோரும் அதைவிட ஏராளம்... நமது குடும்பமும் இரண்டு பேரை இழந்துள்ளது. என்னைவிட நீங்கள் மூத்தவர் நீங்கள் தான் இந்த நேரத்தில் தைரியமாக இருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீர் சொல்வது உண்மைதான்... ஆனாலும் சாரதாவின் இழப்பை என்னால் தாங்கமுடியாது பவானி... திருமண வயதில் இருக்கும் உம்மையும், என்னுடைய இரண்டு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்.... இனி எனக்குத்துணையாக யார் உள்ளார்...?*

அண்ணா நீங்க எந்த உலகத்தில் இருக்கிறீங்க.... இப்போது நம்மட சமூகம் இருக்கிற நிலையில உயிர் தப்பிறதே பெரிய காரியம்... இந்தச் சண்டை எப்போது முடியுமோ தெரியாது.... அதற்குள்ள என்னுடைய திருமணத்தையும் வாழ்க்கையையும் யோசிக்க முடியுமா....? அதையெல்லாம் அந்த நேரம் யோசிப்பம்.... நீங்க தயவு செய்து கொஞ்சமாவது சாப்பிடுங்க.... உமாவுக்கும் ஊட்டிவிடுங்க...

மெதுவாகவே விடிந்து கொண்டு வந்தது. வெளியே காட்டு வழியால் யாரோ கதைத்துக் கொண்டு போனார்கள். சிறிய நேர இடைவெளிவிட்டு, கரைத்தபாலை துணியில் நனைத்துக் குழந்தைக்குக் கொடுத்துக் கொண்டிருந்தாள் பவானி. உமாவின் கலகலப்பும் செல்லமும் காணாமல் போயிருந்தன. வயிற்றிலிருக்கும் போது தம்பிப் பாப்பாவைப் பற்றி அம்மா சொன்ன ஆசை வார்த்தைகளெல்லாம் பொய்யாகப் போயிருந்தன. அம்மாவுக்கு என்ன நடந்தது.....? தங்களுக்குச் சொல்லாம அவ ஏன் செத்துப் போனா......? பள்ளிக் கூடத்துக்கு இனி எப்ப போகப் போறது....? இவைகளுக்கெல்லாம் அவளுக்கு விடை தெரியாமல் இருந்தது. யாரும் அவளுக்கு அதைச் சொல்லுவதாகவும் இல்லை.....

பெண்களும் குழந்தைகளும் பெருங்கூட்டமாக ஒரே பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். யாரோ வெளி நாட்டுக்காரர்கள் வந்து குழந்தைகளுக்குப் பால் விநியோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதாகச் சிலர் பேசிக் கொண்டார்கள். பவானியின் கரைச்சலைத் தாங்கமுடியாமல் படுத்திருந்த குமார் உமாவையும் கூட்டிக் கொண்டு வெளியே கிளம்பிப் போனான். வரிசையில் நின்று இரண்டு 'கப்' பால் வாங்கினான். ஒன்றை உமாவுக்குக் குடிக்கக் கொடுத்துவிட்டு, மற்றையதுடன் கடையொன்றைத் தேடிப் போனான் ஒரு கிலோ சீனியும், அரைகிலோ பருப்பும், இரண்டு தேங்காய்களும் ஐயாயிரம் ரூபா கொடுத்து வாங்கினான்.

கொட்டிலுக்கு வரும் வழியில் அவனுடைய தலைக்கு மேலால் எறி கணையொன்று வேகமாகச் சென்று தூரத்தில் விழுந்து விடித்தது. குமார் குழந்தையுடன் நிலத்தில் விழுந்து படுத்துக் கொண்டான். தொடர்ச்சியாக எறிகணைகள் ஏவப்பட்டுக் கொண்டிருந்ததனால் அந்தப் பிரதேசகம் முழுவதும் காதுகள் அடைக்கும் வண்ணம் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன. பவானியின் நிலையை எண்ணியபடி உமாவைத் தோளில் அணைத்துக் கொண்டு மெதுமெதுவாகப் போய் பங்கருக்குள் விழுந்தான் அவன்.

இருட்டுமடு கிராமத்திலிருந்தும் சனங்கள் இடம் பெயர்ந்து கொண்டிருந்தார்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக விழுந்து வெடிக்கும் எறிகணைகள் பெரும் சேதத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. காயப்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகக் கூட ஒருவராலும் முடியவில்லை. துப்பாக்கி களின் வெடிச் சத்தங்களும் தொடர்ந்து கேட்டவண்ணமே இருந்தன. எறிகணைகளை வீசுவது யார்....? துப்பாக்கிகளை வெடிக்க வைப்பது யார்.....? பொதுமக்களின் பாதுகாப்புக்கு வழி என்ன....? இந்தச்சண்டை ஏன் நடக்கிறது....? இவைகள் யாவுமே விடைகள் அறிய முடியாத வினாக்களாக காற்றோடு காற்றாகக் கரைந்து போய்க் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவானி பிறந்த குழந்தையைத் தூக்க, உமாவை அணைத்துக் கொண்டு ஆட்டோவில் ஏறி அதனை 'ஸ்டாட்' செய்தான் குமார்.

சனக் கூட்டம்மட்டுமன்றி, எறிகணை வீச்சினால் முறிந்து குறுக்கேகிடந்த மரங்களும் வழியைத் தடைசெய்தன. அனுமான் அழித்த அசோகவனத்தைப் போல் வழி நெடுகிலும் காடுகள் அலங்கோலமாகச் சிதைந்து சின்னாபின்னமாகக் காணப்பட்டன. தென்னைகளும், பனைகளும் தலைகள் சீவியெறியப்பட்டு மொட்டையாய்க் காட்சியளித்தன. உரிமைப் போராட்டம் பற்றி எதுவும் அறியாத மந்தைகளின் உடல்களும் கூட ஆங்காங்கே உரிமை கோரப்படாமல் கிடந்தன. உடைந்த தளபாடங்களின் பாகங்கள்போல், மனித உடலின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக்கப்பட்டுக் கவனிப்பாரற்றுக் கிடந்தன. இவைகளையெல்லாம் தாண்டியபடி நடையிலும் வாகனங்களிலும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மக்கள் போய்க் கொண்டிருந்தர்கள். குமாரும் எதுவித உணர்வுகளுமின்றி சடத்தைப் போல தனது ஆட்டோவை அதனூடாகச் செலுத்திக் கொண்டிருந்தான்.

நேரம் இரவு 9 மணியைத் தாண்டியிருந்தது. அரைமணி நேரப் பயணத்தின் பின்னர் எல்லோரும் ஒரு இடத்தில் தரித்து நின்றார்கள். குமார் திரும்பி 'சீற்'றைப் பார்த்தான் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு உமாவையும் அணைத்தபடி பவானி கண்களை மூடிக்கொண்டிருந்தாள். அவனும் வீதியின் ஒருபக்கமாக ஆட்டோவை நிறுத்தினான். அது சுதந்திரபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......... இது லண்டன் பீ.பீ.சீ. இலிருந்து முழங்கும் தமிழோசை....

முதலில் இலங்கைக் கண்ணோட்டம்.....

இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச படைகளுக்கும் புலிகளுக் குமிடையில் நடைபெற்றுவரும் சண்டையில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் குண்டு வீச்சில் கொல்லப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமாக நடாத்தப்படும் இக்குண்டு வீச்சுக்களை உடனடியாக நிறுத்த வேண்டுமென அரசிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர். அரசு இக் குண்டு வீச்சுச் சம்பவங்களை மறுத்துள்ளது....."

"......... டேய்..... தியாகு சாப்பாட்ட மேசையில மூடிவை..... எல்லாச் செய்திகளும் முடியட்டும்... பிறகு சாப்பிடுவம்..... இவன் அருளம்பலத்தை ரெண்டு நாளா இஞ்சால காணல்ல..... அது சரி... இவங்கங்களெல்லாம் அரசாங்கத்தை எதிர்த்து முப்பது வருசமா சண்டை பிடிச்சு என்னத்தையடா கண்டவங்கள்... நாங்கள் சண்டை வேணாமெண்டு சொன்னாப் போல இவங்கள் கேட்பினமா....?

*நீங்கள் இதையெல்லாம் ஏனையா அவனிட்டச் சொல்லுறியள்......?*

*டேய்.... தியாகு நீ முன் அறையில் போய் இரு.....*

நீர் சொல்லுறதும் சரிதான் ஆனந்தன்..... அந்த நேரம் நீர் பிறக்கவில்லை.... நான் சொல்லுறதக் கொஞ்சம் கேள்... 83 இல கலவரம் வந்த போது நம்மட நாட்டில இருந்து தமிழர்கள் பெருந்தொகையாகப் புலம்பெயர்ந்து பாதுகாப்பைத் தேடி இந்தியாவில தமிழ் நாட்டிற்கு ஓடிற்றாங்கள்...அந்த நேரம் இந்தியாவை இந்திராக்காந்தி அம்மையார்தான் ஆட்சி செய்தவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டில இயக்கங்க ளெல்லாம் தங்கள் நடவடிக்கை களை விரிவாக்கி நல்லாப் பலமடைஞ்சிற்றாங்க.... அப்ப இங்க இருந்த ஜே.ஆருக்கு இதால பெரிய தலையிடியாப் போச்சு... இந்திரா அம்மையார் வேறு அவரைக் கரைச்சல்படுத்தி தமிழர் பிரச்சினையதைத் தீர்க்கச் சொல்லித் தொந்தரவுகொடுத்தா.... அதால தமிழர் பிரச்சினையைப் பற்றி திம்புவிலயும் பேச்சுவார்த்தை நடந்திஞ்சி.... ஆனா தமிழரர கஷ்டகாலம் அந்த நேரத்தில் இந்திரா அம்மையாரைச் சீக்கியர்கள் சுட்டுப் போட்டாங்க.... அதுக்குப் பிறகு அவவுடைய மகன் ராஜீவ்காந்தி பிரதமரானதும் கதை வேற மாதிரிப் போயிற்று....

*சரி... சரி.. போதும் போதும்... நாளைக்கு உங்கட கூட்டாளி அருளம்பலத்தோட மிச்சக் கதய வச்சிக் கொள்ளுங்க...... எனக்குக் களைப்பா இருக்குது..... என்னை விடுங்க...*

◈◈◈◈◈

தரப்பாளை விரித்தெடுத்து தன்னந்தனியனாகக் கட்டினான் குமார். கீழே இன்னொன்றை விரித்துவிட்டு உமாவைப் படுக்க வைத்தான். வயிறு வலிப்பதாகக் கூறிக்கொண்டு உமாவுக்குப் பக்கத்தில் பவானியும் சுருண்டு படுத்தாள். சிறிது நேரத்தின் பின்னர், தலைக்குக் கீழே கைகளை மடித்து வைத்துக் கொண்டு அவர்களுக்குச் சமீபமாக அவனும் படுத்தான்.

தூக்கம் அவனை அரவணைக்க மறுத்தது. கடந்த கால நினை வுகள் ஒவ்வொன்றும் காட்சிகளாகி அவன் மனத்திரையில் ஓடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் பிரிவும், மனைவியின் இழப்பும் அவனை நிலை குலைய வைத்திருந்தன. அவனால் சாகவும் முடியவில்லை, வாழவும் முடியவில்லை. இரண்டு குழந்தை களும் அவனுக்கு மட்டுமன்றி பவானிக்கும் சுமையாய் போனது தான் அவனை வாட்டியது. வாழவேண்டிய வயதில் அவளும் தன்னுடன் சேர்ந்து துன்பங்களை அனுபவிப்பதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மூன்று பேருக்கும் இப்போதுள்ள ஒரே கொழுகொம்பு, தான் மட்டும்தான்.. எப்படியும் தான் வாழ்ந்து தான் ஆகவேண்டும். அவனுக்கு வீட்டில் சுவாமி அறையில் இருக்கும் கீதாசாரம் அப்போது ஞாபகத்திற்கு வந்தது.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது...
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது....
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்....

மனதில் தெளிவு பிறந்திருந்தது. சிந்தனைகளை ஒரு நிலைப் படுத்தி, கண்களை மூடிக் கொண்டு அப்படியே படுத்தான்.

எவ்வளவு நேரம் அப்படியே படுத்திருந்தானோ தெரிய வில்லை. வாகன இரைச்சல்களும், சனங்களின் கதைச் சத்தமும் அவனை எழுப்பின. தூக்கத்தி லிருந்து எழும்பிய அவன் அதே இடத்தில் உட்கார்ந்தபடி பவானியைத் தேடினான். அவள் பக்கத்தில் தேனீர்க் கோப்பையுடன் நின்று கொண்டிருந் தாள். உமா இன்னும் எழும்பவில்லை. அவளுக்குப் பக்கத்தில் 'பங்கரில் பிறந்த' இளையது படுத்திருந்தது. அவனுக்கு தேனீர்க் கோப்பையைக் கொடுத்துவிட்டு உமாவின் சட்டையொன்றைக் கிழித்துக் கொண்டு துணியுடன் பங்கருக்குள் இறங்கிப் போனாள் பவானி. அவளுடைய வயிற்று வலியின் காரணம் அவனுக்கு அப்போதுதான் விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா இறக்கும்வரை துடக்கு நேரத்தில ஒருவருடைய கையாலையும் ஒன்றையும் வாங்கிச் சாப்பிடமாட்டா, மற்றவர்களையும் சாப்பிடவிடமாட்டா, கிணற்றில் தண்ணியும் அள்ள ஏலாது.... அதோட குசினிப் பக்கமும் அவங்க போகவும் மாட்டாங்க..... அதெல்லாம் அந்தக் காலம்..... போராட்டம் எப்படியெல்லாம் இப்ப மனிசர மாத்திப் போட்டுது......

சிந்தனையிலிருந்து விடுபட்ட குமார் வெளியே முகங்கழுவப் போனான். அங்கே சில 'துண்டுப்பிரசுரங்கள்' காற்றில் பறந்து கிடந்தன. தமிழ் மொழியில் அச்சிடப்பட்டிருந்த அவற்றை எடுத்துப்படித்தான்.

தமிழ் மக்களுக்கு அரசாங்கம் விடுக்கும் அன்பான வேண்டுகோள்....

பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுபட்டு, உடனடியாகப் பாதுகாப்புப் படையினரிடம் சரணடையுங்கள்......

உங்களுக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்படும்.......

அதற்கான யுத்த சூனியப் பிரதேசமும் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.... அவையாவன.......

படித்த அவனுடைய முகத்தில் எதுவித பிரதிபலிப்பையும் காண முடியவில்லை.

இரண்டு பேரும் சேர்ந்து அன்றைய தினம் சமைத்து உண்டார்கள். சாப்பிட்ட கையுடன் பால்மாவும் வேறு பொருட்கள் சிலவும் வாங்கிவர கடையைத் தேடிப்போனான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு லக்டோஜன் பால்மாபெட்டி மூவாயிரம் ரூபா...... ஒரு கிலோ சீனி ஆயிரத்து ஐநூறு ரூபா, இரண்டு கிலோ அரிசி ஆயிரம் ரூபா விலைப்படி பொருட்களை வாங்கிக் கொண்டு திரும்ப ஆயத்தமான போதுதான் கடைக்காரர் இன்னுமொருவருடன் உரையாடிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

'........ போகிற போக்கில இங்கையும் இருக்க முடியாமல் இரண்டொரு நாளில இடம் பெயர வேணும்போல இருக்குது. சனங்கள இலங்கை இராணுவத்திட்ட சரணடைய அவங்கள் விடாயினம்... கடைசிவரை ஒற்றுமையாக இருந்து நம்மட பிரதேசத் தக் காப்பாத்த வேணுமென்டு அவை சொல்லுயினம்....'

மற்றவர் தொடர்ந்தார்...

'......இயக்கத்தில இருக்கிற இரண்டாங்கட்டத் தலைவர்கள் பலருக்கும் இந்த சண்டையில விருப்பம் இல்லப் போல.... அதாலதான் மேலிடத்து உத்தரவுப்படி போராட்டத்தோட சம்பந்தப்பட்ட ஆங்கிலப் படங்களை தமிழாக்கம் செய்து மக்களுக்குப் போட்டுக் காட்டுறாங்கள் போல..... ராத்திரியும் (The Three Hundred) "த திறீ ஹன்றட்" படம்போட்டவையாம்.... அந்தப் படம் மக்கள் தங்கள் தலைவனைக் காப்பாற்றுவதற்கு படுகிற கஷ்டங்களை விபரிக்குதாம்....

அவன் கொட்டிலுக்குத் திரும்பியவுடன் பவானியிடம் விசயங்களைச் சொன்னான்.

ஊரோடு ஒத்ததுதான் நமக்கும்..... ஒருவேளை இதுவே கடைசிச் சண்டையாகவும் இருக்கலாம். இந்த ஜீவமரணப் போராட்டத்தில் அதிஷ்டமுள்ளவர்கள் மட்டுமே பிழைக்கலாம், அதையும் கடவுளே தீர்மானிப்பார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் உரையாடல் முடிவடைந்து அரைமணி நேரம் கூட ஆகியிருக்காது. முதல்நாள் அவர்கள் கடந்து வந்த கிராமங்களின் பக்கம் எறிகணை வீச்சுச் சத்தங்கள் அசுர வேகத்தில் கேட்டுக் கொண்டிருந்தன. ஒன்று, இரண்டு, நான்கு என பெருக்கல் வாய்ப்பாட்டு வரிசையில் அவற்றின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்தது. அடுத்த கட்ட நடவடிக்கையைத் தீர்மானிக்க முடியாதவர்களாக மக்கள் அவ்விடத்தை விட்டுக் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந் தார்கள். குமார் ஒரு அரிசி குற்றும் ஆலை முதலாளியிடம் தனது ஆட்டோவைப் பத்தாயிரம் ரூபா விலை பேசி விற்றான்.

காட்டு வழிகளெல்லாம் சனங்கள் நிரம்பி வழிந்தார்கள். குமாரும், பவானியும் இரண்டு பிள்ளைகளுடனும் ஒரு பைக்குள் அடங்கக்கூடிய பொருட்களைத் தூக்கிக் கொண்டு நடந்தார்கள். உமா குமாரின் தோளில் படுத்திருந்தாள். கால் வலியும் கவலைகளும் நிரம்பிய இந்த பயனற்ற பயணத்தின் வேதனைகளை யாரிடம் சொல்லி அழுவது.....? இது எப்போது முடிவடையும்....? இந்தச் சண்டையில் நாம் தப்பிப் பிழைப்போமா....? போன்ற கவலைகள் எல்லார் முகத்திலும் தெரிந்தது. இவ்வாறான பல்வேறு கவலைகளுடனும் சென்று கொண்டிருந்த மக்களையெல்லாம் சின்னஞ்சிறு கிராமமான இரணைப்பாலை வரவேற்றது.

சனக் கூட்டத்திற்கிடையே நின்ற பவானியின் பாடசாலை அதிபரான மகாலிங்கம் 'சேர்' இவர்களைக் கண்டு அருகே வந்து பேச்சுக் கொடுத்தார். அவர்களுடைய பாடசாலை குண்டுகள் போடப்பட்டு தரைமட்டமாகிவிட்டதை தான் அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாக அவர் சொன்னார். பவானி தன்னுடைய குடும்பத்தில் இரண்டு பேரை இழந்துவிட்டதைக் கூறி, புதிதாகப் பிறந்த குழந்தையின் கதையையும் சொல்லி அழுதாள். மகாலிங்கம் 'சேர்' அவர்களுடைய கதையைக் கேட்டுக் கவலை ப்பட்டார். கடைசியில் ஆறுதலான ஒரு தகவலையும் அவர் சொன்னார். அதைக் கேட்டகுமாரின் முகம் பிரகாசமானது.

'.......வெளிநாட்டுக் கப்பல்கள் மூலமாக கர்ப்பிணித் தாய்மார்கள்.... பிறந்த குழந்தைகள்... முதியவர்கள்... நோயாளிகள் என்போரைப் பாதுகாப்புடன் திருகோணமலை வைத்திய சாலைக்குக் கொண்டு போறாங்கள்... நீங்களும் ஒருக்கால் முயற்சி செய்து பாருங்கள்.... இயக்கத்தைத் தெரிந்தவை மூலமாக நடவடிக்கை எடுத்தால் நிச்சயம் வெல்லலாம்....'

இயக்கப் பெடியள் இருந்த இடத்தை விசாரித்துக் கொண்டு குமார் முன்னே நடக்க, பவானி அவனைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தாள். பிறந்த குழந்தையை மட்டுமாவது பவானியுடன் அனுப்பிவிடலாமென அவன் நினைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்க, அவளோ தமையனையும் குழந்தைகளையும் அனுப்புவதற்குத் திட்ட மிட்டுக் கொண்டிருந்தாள்.

குழந்தைய வச்சிருக்கிற இவவின்ர புருஷன் எங்க.....?
நீங்க மாவீரர் குடும்பமோ.....?
உங்கட குடும்பத்தில ஆரும் போராளியாக
இருக்கினமோ....?

அடையாள அட்டை, இல்லாதவனைப் பொலிஸ்காரன் கேள்விகேட்பது போல் ஆளையாள் மாறி மாறி அவனைக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவைகள் எல்லா வற்றிற்கும் பொறுமையாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான் குமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய பொறுமையைச் சோதிக்கும் விதமாக அவர்கள் மேலும் மேலும் கேட்டுக் கொண்டே இருந்தார்கள்.

அண்ணா.... நீங்க வாங்க நாம போவம்..... இவங்ககிட்ட உதவி கேக்கிறதவிட ஒரேயடியாச் செத்துப் போவம்......

".....அவ படிச்சவ.... அவவுக்கு விசயம் விளங்கும்..." என்று ஒருவன் சொல்லிக் கொண்டிருக்கும் போது இன்னுமொருவன் உமாவின் கையைப் பிடித்தபடி..... இவவுக்கு எத்தனை வயது....? என்று கேட்டான்..... உமா அழத் தொடங்கினாள்.

பொறுமையை இழந்த குமார் அவனின் கையைத் தட்டிவிட்டபடி அவ்விடத்திலிருந்து போக முயற்சித்தான். அவர்களும் அதனைத்தடுக்க முயலவில்லை.

எறிகணை வீச்சுக்கள் புதிய இடங்களுக்கும் பரவ, அத்துடன் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்ட வண்ணமே இருந்தன. குமாருக்கு மட்டுமன்றி, எல்லோருக்கும் பசியுடன் தாகமுமெடுத்தது. வீதியோரமாக இருந்த ஒரு கிணற்றடியை அடைந்து தாகத்தைத் தீர்த்து, வயிற்றையும் நிரப்பிக் கொண்டார்கள். பின்னர் இன்னுமொரு இடப்பெயர்வாக புதுமாத்தளனை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

புதுமாத்தளனை வந்து சேர்ந்த போது இரவு எட்டு மணியாகிவிட்டிருந்தது. மக்கள் கூட்டத்துக்குள் அவர்களும் தங்குவதற்காக ஒரு இடத்தை தெரிவு செய்து விட்டு சமைப்பதில் ஈடுபட்டனர். அப்போது மக்கள் அச்ச உணர்வுடன் காணப் பட்டதுடன் காதோடு காதாகச் செய்தியொன்றையும் பரப்பிக் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'..... தம்பி உம்ம நம்பித்தான் சொல்லுறன்... சனங்கள் இராணுவத்திட்ட சரணடையப் போன நேரத்தில, இயக்கமும் அவையோட போய் தற்கொலைத் தாக்குதல் நடத்திப் போட்டுதாம்... பெருந்தொகையான இராணுவமும், பொது மக்களும் உயிரிழந்து போனவையாம். இப்ப சரணடையப் போறவைய நிர்வாணப்படுத்தின பிறகு தான் இராணுவம் தங்கட கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எடுக்கிறதாம்......'

◈◈◈◈◈

டேய் தியாகு... நம்மட கேற்றடியைப் பார்.... ஆரோ கூப்பிடுறமாதிரி இருக்கு...

ஆ.... நீரா.... வாரும்.... வாரும்....

என்ன அருளம்பலத்தார் இந்தப் பக்கமே இரண்டு நாளா ஆளக் காணல்ல.........

*என்ன செய்யிறது மணியம்.... இப்ப வயதும் போட்டுது...... நினைச்ச மாதிரி ஒரு இடத்துக்கும் உடனே போக ஏலுதும் இல்ல....*

*இனி எண்டாலும் இந்த இந்தியாக்காரன் நமக்கு ஏதும் உதவுறானோ தெரியல்ல.....*

நாம பிழைய விட்டுப் போட்டு அவனுக்குப் பேசி என்ன பிரயோசனம்....? ஓ..... செய்தி போகப் போகுது...... அதப் பார்ப்பம்.......

'...... சண் தலைப்புச் செய்திகள்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'....... இலங்கையில் சண்டையை நிறுத்தக் கோரி உடனடியாக தமிழ் நாட்டு அனைத்துக்கட்சி சட்டசபை உறுப்பினர்களும் முதலமைச்சரிடம் தங்கள் பதவி விலகல் கடிதங்களைக் கையளிக்க முடிவு...... மத்திய அரசை சந்தித்துப் பேச மாநில அரசின் அமைச்சர் உடனடியாக டில்லி பயணம்....'

நான் முன்னமே சொல்லிப் போட்டன்.... இவங்கள் தங்கட மூப்புக்கு நினைச்சதச் செய்ய இந்தியா ஒரு நாளும் விடாதெண்டு....

*அது சரி..... மணியம்...... அவையும் ஒரு தரம் பிளேனில வந்து யாழ்ப்பாண மக்களுக்கு சாப்பாடு போட்டவைதானே... அதுக்குப் பிறகுதானே ஜே.ஆர்.... பிரேமதாச எல்லாரும் 'சரண்டர்' ஆனவ....*

அதுகளெல்லாம் பழைய கதையாப் போச்சு...... 1989 இல இலங்கையோட செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இந்திய இராணுவம் நம்மளக்காப்பாத்த வந்த போதும், அவையோட நாம சண்ட பிடிக்க அந்த முயற்சியும் தோல்வியில முடிஞ்சது தான் மிச்சம்... கடைசியில வந்த வழியே அவையும் திரும்பிப் போட்டினம்..... இதையெல்லாம் இப்ப கதைச்சி என்ன பிரயோசனம்.... இனி எண்டாலும் ஏதோ நல்லதா நடக்கட்டும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டைகள் ஓயக்கூடிய அறிகுறிகள் ஒருபக்கத்திலிருந்தும் தென்படவில்லை. இயக்கத்தினர் இளவயதினரைச் சல்லடை போட்டுப் பிடிப்பதாகவும் அதனால் பயத்தின் காரணமாகப் பொதுமக்கள் உள்ளக இடப்பெயர்வுகளை இரவு நேரத்தில் மட்டும் மேற்கொள்வதாகவும் கதைகள் வேகமாகப் பரவின. ஏரிக்குக் குறுக்காகச் சென்று அக்கரையிலிருக்கும் இராணுவத்திடம் சரணடையச் செல்வோரை இயக்கத்தினர் தடுப்பதாகவும், மீறுவோரைத் தாக்குவதாகவும் சனங்கள் பேசிக் கொண்டார்கள். உண்மை, பொய் தெரியாமல் மக்கள் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தனர். அப்படியிருந்தும் அவர்களில் பெரும்பகுதியினர் ஒரு திசையை நோக்கிப் போய்க் கொண்டே இருந்தனர். குமாரும் அத்திசையை நோக்கி அவர்களுடன் பயணிக்க முடிவு செய்தான். அது பழைய மாத்தளனூடாக வலைஞர் மடம் சந்திக்குப் போகும் திசை.

வலைஞர் மடம் சந்தியை அடைந்தபோது இரவாகி யிருந்தது. கிணற்றில் எல்லாரும் வயிற்றை நிரப்பினார்கள். குமார் வீதி ஓரத்தில் சிறுநீர் கழித்தான். அதைக் கண்ட பவானியும் உமாவும் இன்னுமொரு கரையில் குந்தினார்கள். இப்போதெல்லாம் இதை ஒரு சின்ன விஷயம் போல் உணர ஆரம்பித்தார்கள். உமா இதைப் போன்ற விஷயங்களுக் கெல்லாம் இப்போது பழக்கப்பட்டுப் போயிருந்தாள்.

குமாருக்கு அந்த இடம் புதிதாக இருந்தது. அங்கிருந்து என்ன செய்வதென்றும் விளங்கவில்லை. அவனைப் போலவே எல்லாச் சனங்களும் குழப்பமானதொரு நிலையில்தான் இருந்தார்கள். அவன் அங்கிருந்த ஒரு பெரியவரிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'..... தம்பி.... பழைய மாத்தளன் சந்தியில நிண்டு பார்த்தால் 'சாளை'யில் இராணுவம் நிற்பது தெரியும்.... அவ்வளவு கிட்ட.... ஆனா நாம இங்க இருந்து அங்கால போக ஒரு ஏற்பாடும் இல்ல... இப்படித்தான் சனங்கள் எல்லா இடங்களுக்கும் அலையுதுகள்.... நீங்க வலைஞர் மடம் போங்கோ... சில நேரம் அங்க ஒரு வழி பிறக்கும்...... '

குமார் சில நிமிடங்கள் யோசித்தான். பின்னர் பவானி யுடனும் கதைத்துவிட்டு அன்றைய இரவை மாத்தளனில் கழிக்கும் எண்ணத்தில் ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தான்.

கிட்டத்தட்ட 300 மீற்றர் அகலமும் பத்து கிலோமீற்றர் நீளமுமுள்ள மாத்தளன் கடற்கரைப் பகுதியில் இரண்டு இலட்சத்துக்கு மேல் சனங்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் அனைவரும் பணயக் கைதிகள் போல் சிறைபிடித்து வைக்கப்பட்டிருப்ப தாகவே குமார் நினைத்தான். அந்தப் பணயக் கைதிகளில் அவனுடைய குடும்பமும் அடக்கம். ஏற்கனவே அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத இந்தக் கிராமப் பகுதிகளில் குடிநீர், சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம் எதுவுமே இடம் பெயர்ந்து வந்த சனங்களுக்குக் கிடைக்கப்போவதில்லை. இவைமட்டுமன்றி, இயற்கைக் கடன் களைக் கழிக்கக்கூட இவர்களுக்கு இடவசதியில்லை. இந்த இலட்சணத்தில் அங்கிருந்தவர்களுடன் இவர்களும் சேர்ந்து கொண்டார்கள். இருட்டிக் கொண்டு வருவதைக் கண்ட மக்கள் அன்றைய தினம் தாம் உயிர்தப்பியதை அதிஷ்டமாக நினைத்துக் கொண்டு, இரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

மின்னல் ஒளியின் பின்னர் இடியோசை வருவதைப் போல்லாது, இடியோசையாக எறிகணை வீச்சுக்கள் முன்னேவர, சூரியன் பயந்தாங்கொள்ளியைப் போன்று மெது மெதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே வந்து கொண்டிருந்தான். காலைப்பொழுது அல்லோல கல்லோலத்துடனேயே விடிந்தது. எறிகணைகள் விட்டு, விட்டு விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன. பொது மக்கள் இருந்த கொட்டில்களிலும் அவை விழுந்து வெடித்ததினால் பெருமளவு உயிரிழப்புகளும், பலருக்குக் காயங்களும் ஏற்பட்டன.

குமார் தங்கியிருந்த இடத்தைக் கடந்து சைக்கிளில் சென்ற ஒருவர், இன்னொருவரை அதில் ஏற்றிச் சென்றார். அவருடைய ஒரு 'கை' துண்டிக்கப்பட்டு அது அகற்றப்பட்டிருந்ததை அவன் கண்டான். கையகற்றப்பட்டிருந்தவருடைய உடலிலிருந்து வடிந்த இரத்தம் சைக்கிளைச் சிவப்பாக்கியிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த போது ஒரு மோட்டார் சைக்கிள் அவ்விடத்தில் வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து ஒரு இளம்பெண்ணை முழு நிர்வாணக்கோலத்தில் இரண்டு பேர் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குள் ஓடினார்கள். அப்பெண் வேதனையால் துடித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் ஆஸ்பத்திரியில் நிற்கக் கூட இடமில்லாது அது காயப்பட்டோரால் நிரம்பி வழிந்தது. அதுமட்டுமன்றி வெளியிலும் மர நிழல்களின் கீழ் காயப்பட்டோர் கிடத்தப்பட்டிருந்தனர். கடமையிலிருந்த நான்கு ஊழியர்களுடன் பொதுமக்களும் சேர்ந்து நோயாளிகளுக்கு சிகிச்சையளித்துக் கொண்டிருந்தனர்.

எறிகணை வீச்சுக்கள் சற்றுக் குறைவடைய, உடனடியாக அந்த இடத்தை விட்டு மீண்டும் புதுமாத்தளனுக்கே செல்ல குமார் முடிவெடுத்தான். கவலைகளைச் சுமந்த மனமும், களைத்துப்போன உடலும் அவர்கள் பயணத்தைத் தொடர இடைஞ்சலாக இருந்தன. பவானியும், உமாவும் அவனுக்குத் தொல்லைகள் கொடுக்காததால் அவன் சற்றுத் தெம்பாக இருந்தான். '.....மனிதனுக்குத் தொல்லைகள் கொடுக்கும் கடவுள் ஏதோ ஒரு விதத்தில் அவற்றைத் தாங்கும் சக்தியையும் அவர்களுக்குக் கொடுக்கிறான்.....'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமாத்தளனைச் சென்றடையும் போது விடிவதற்குச் சில மணி நேரங்களே இருந்தன வழியில் ஒரு இடத்தில் பெருமளவு சனங்கள் கூடிநின்றபடி, இயக்கத்தினருடன் விவாதித்துக் கொண்டிருந்தனர். முரண்பாடுகள் அதிகரித்துச் சென்றதால், நேரடியாக அவர்களுடன் மோதுவதற்கும் துணிந்தவர்களாக மக்கள் கோபத்துடன் காணப்பட்டனர். அவ்விடத்தில் குறைந்த எண்ணிக்கையிலிருந்த இயக்கத்தினர் ஆயிரக்கணக்கான மக்களால் சூழப்பட்டவர்களாகவும் இருந்தனர். அவர்களில் துப்பாக்கியுடன் இருந்த ஒருவன் பேசினான்.

‘நாங்கள் மக்களோடு மக்களாகவே இருக்கின்றோம். எப்போதும் எங்களால் முடிந்த உதவிகளை உங்களுக்குச் செய்து வருகின்றோம் கஞ்சி வடித்துக் கொடுத்து, இடம் பெயர்ந்தவர்களை பட்டினியில் வாடாமல் காப்பாற்றி வருகின்றோம் அதே வேளை, முதியவர்களும், நோயாளிகளும் கப்பல் மூலமாக வெளியேற உதவுகின்றோம்.. ஆனால்.... எந்தக் காரணத்தைக் கொண்டும் மக்களை இராணுவத்திடம் சரணடைய நாங்கள் விடப் போவதில்லை.... இது மேலிடத்து உத்தரவு......’

அவன் பேசி முடிப்பதற்குள் சனங்கள் அவன்மேல் பாய்ந்து விழுந்தார்கள். எதிர்பாராத இந்நிகழ்வால் இயக்கத்தினர் ஒரு கணம் அதிர்ச்சியடைந்து போனார்கள் இயக்கத்தினரும், பொது மக்களும் அடிதடியில் இறங்கியதால் அவ்விடம் சிறிது நேரம் யுத்தகளமாக மாறியது. இயக்க இளைஞன் ஒருவன் மரணமடைய, அவர்களில் இன்னொருவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தான். சனங்கள் நாலா பக்கமும் சிதறி ஓடத் தொடங்கினார்கள். புயலுக்கு முந்திய தற்காலிக அமைதியொன்று அப்போது அங்கே ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆகாசவாணி.... செய்திகள்... வாசிப்பது ராஜேஸ்வரி நாராயணன்........ தமிழக முதலமைச்சரின் விசேட செய்தியுடன், தமிழ் நாட்டு அமைச்சர் இன்று பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார்.... இதன் பயனாக தமிழ் நாட்டிலிருந்து மூன்று பேர் மத்திய அமைச்சர்களாக நாளை சத்தியப் பிரமாணம் செய்ய உள்ளனர்..... முதலமைச்சரின் செய்தியில் பிரதமருக்கும், புதிய அமைச்சரவைக்கும் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது...'

சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆனந்தன் செய்தி கேட்டதும் உஷாரானான்.

ஐயா.... என்ன தூங்கிக் கொண்டா இருக்கிறீங்க... எழும்புங்கோ.... உங்கட செய்தி போகுது.... கேளுங்கோ.... தமிழ் நாட்டு முதலமைச்சர் பிரதமரையும், அமைச்சர்களையும் வாழ்த்திச் செய்தி அனுப்பியிருக்கார்.

அரை குறைத் தூக்கத்திலிருந்த மணியத்தார் கொட்டாவி விட்டுக் கொண்டு எழும்பியதும் ஆனந்தன் பேச்சைத் தொடர்ந்தான்.

'.......அவங்கள நம்பி இருந்தா நாம கூண்டோட அழியவேண்டியதுதான். நம்மட பிரச்சினையைப் பற்றி அவங்களுக்கு கவலையே இல்லை....... எல்லா விசயத்திலயும் நாம சொந்தக் காலில நிக்க வேணும்......'

சும்மா அவதிப்படாதேயும் தம்பி.... உலக நாடுகள் தேவையான நேரத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான நேரம்...... யாருக்குத் தேவையான நேரம்...... தேவையான நேரத்தத் தீர்மானிப்பது யார்...? இயக்கம் மட்டுமல்ல..... எல்லாரும் சொந்தக் காலிலதான் நிக்க வேணும்... சந்தர்ப்பமும் அதிஷ்டமும் ஒரு தரம்தான் கதவைத் தட்டும்.....

என்ன தத்துவமெல்லாம் பலமா இருக்கு...... நீர் எத மனதுல வைச்சுக் கதைக்கிறீரோ தெரியல்ல.......

டேய் தியாகு..... இங்கவா.... கேற்றைப் பூட்டு நான் படுக்கப் போறன்.......

◈◈◈◈◈

காலை எட்டு மணியளவில் தொடங்கிய விமானக் குண்டு வீச்சுக்களும், எறிகணை வீச்சுக்களும் மூன்று மணிநேரமாகியும் குறைவடையவில்லை. நாள் முழுவதும் பங்கருக்குள் இருப்பது மிகச் சிரமமாக இருந்தது. குண்டு வீச்சுக்களின் போது கடற்கரை மணலில் அமைக்கப்பட்டிருந்த பங்கர்கள் அதிர்வினால் இடிந்து விழுந்தன. உயிரைக்கையில் பிடித்தபடி அதனையும் சரி செய்ய வேண்டியிருந்தது. துப்பாக்கி வெடிச்சத்தங்களும் தொடர்ந்து கேட்டவண்ணமே இருந்தன. மொத்தத்தில் கண்ணுக் கெட்டிய தூரம்வரை ஒரே புகை மண்டலமாக அந்தப் பிரதேசம் காட்சியளித்தது.

கண்ணுக்கு இருட்டுப் படத்தொடங்கியதும் வெடிச் சத்தங்களும் எறிகணைச் சத்தங்களும் குறைவடையத் தொடங்கின. அமைதியைக் கண்டு எட்டிப்பார்க்கும் ஆமையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையைப் போல, தப்பிப் பிழைத்தவர்கள் பங்கர்களிலிருந்து மெதுமெதுவாக வெளியே பார்க்க ஆரம்பித்தார்கள். எங்கும் அழுகுரல் சத்தங்கள் மரணவீட்டு ஓலங்களாக ஒலித்துக் கொண்டிருந்தன. காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும் முயற்சியில் சிலர் இறங்கியிருந்தனர். குமாரும் வெளியில் வந்து சுற்றும் முற்றும் பார்த்தான். வெளியுலக நடப்புகள் அவனைப் பாதித்ததாகத் தெரிய வில்லை. அவன் அடுப்பை எரித்து தேனீருக்கு தண்ணீரை வைத்தான்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது எதுவித கட்டுப்பாடுமில்லாமல். சனங்கள் கூட்டங் கூட்டமாக ஏரிக்கரையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று சரணடையச் செல்வதை அறியக் கூடியதாக இருந்தது. அவனால் உடனடியாக முடி வொன்றையும் எடுக்க முடியாமல் இருந்தது. அந்த நேரம் ஒரு மோட்டார் சைக்கிள் மிகவேகமாக வந்து அவர்களின் இருப்பிடத்திற்கு முன்னால் நின்றது. அதிலிருந்து இறங்கிய சுரேஷ் இன்னொருவனுடன் அவர்களை நோக்கி வந்தான். பவானி எரிச்சலுடன் குமாரைப் பார்த்தாள்.

'அத்தான் என்ன மன்னிச்சிடுங்க... பவானி நீரும் என்ன மன்னிச்சிடும். உமக்கு விருப்பமில்லாத போதும் நான் உங்கள கரைச்சல் படுத்திற்றன்..... நம்மட ரெண்டு குடும்பமும் இனி நிரந்தரமாப் பிரிஞ்சிடுமோ எண்டு பயமா இருக்குது.... நாம ஒண்டா இருக்க வேணுமெண்டுதான் அப்பாவும் பவானிமேல எனக்கு ஆசைய ஊட்டி வளர்த்திட்டார்....'

சுரேஷ்...... இதக் கதைக்கவா நாம இஞ்ச வந்தது... உடனே வெளிக்கிடும்... நாம ஏரிக்கரையூடாக சரணடையப் போற சனத்தை மறிக்க வேணும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தான் நீங்க உடனடியாக வெளிக்கிட்டுப் போய் இராணுவத்திட்ட சரணடையுங்கோ... எங்களுக்கு உயிர்தப்ப இனிச்சந்தர்ப்பம் கிடைக்குமெண்டு நான் நினைக்கல்ல...... அதிஷ்டமிருந்தால் பிறகு சந்திப்பம்..... பவானி உம்முடைய வாழ்க்கை சந்தோஷமா அமையட்டும்.....

சுரேஷுடன் வந்த மற்றவன் இடைமறித்தான்

'..... யாரும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் போகக் கூடாது..... நம்மட பிரதேசத்தை நாமளே காப்பாற்ற வேண்டும்......'

அவனுக்கும் சுரேஷுக்கும் வாய்த் தர்க்கம் ஆரம்பித்து, சிறிது நேரத்தில் அது கைகலப்பாக மாறியது. அவ்விடத்தில் சனங்கள் கூட ஆரம்பித்த போது ஒருவரும் எதிர்பாராத வேளையில், தனது கைத்துப்பாக்கியால் சுரேஷை மார்பில் சுட்டு விட்டு மோட்டார் சைக்கிளில் ஏறிப் போய்விட்டான் அவன்.

'...... நான் இனித்தப்பமாட்டன்..... உடனடியாக இந்த இடத்தவிட்டு சனங்களோட நீங்க தப்பிப்போங்க... இப்பபோறவன் வேற ஆட்களோட திரும்பவும் இங்க வருவான்..... அத்தான் கொஞ்சம் கிட்ட வாங்க.... இப்ப என்னைச் சுட்டவன் இயக்கத்தைப் பற்றிய இரகசியங்களை எதிரிகளுக்குத் தெரியப்படுத்துவதாக மேலிடத்திற்கு சந்தேகமுள்ளது. அவனுக்கு இன்று காலையில் தான் விசாரணை நடைபெற்று முடிந்து எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டான். அவனைப் பற்றிய தகவல்களை நான்தான் மேலிடத்திற்குத் தெரியப்படுத்தியதாக அவன் என்மீது சந்தேகப்படுகிறான். அதனால்தான் என்னைச் சுட்டிருக்கிறான். ஆனால் உண்மையில் நான் அவனைப்பற்றி மேலிடத்திற்கு ஒன்றுமே சொல்லவில்லை... எனக்கு சாவதைப் பற்றிய பயம் இல்லை. ஆனால் நமது போராட்டம் என்ன ஆகுமென்றுதான் கவலை. இத்தனை வருடங்களும் மக்கள் பட்ட கஷ்டங்களுக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்க வேண்டும்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும்.... கிடைக்கும்... இலவு காத்த கிளியைப் போல மக்கள் இருக்க வேண்டியதுதான். சுரேஷ் இப்ப நீர் இருக்கிற நிலையில் நான் ஒன்றும் விரிவாகக் கதைக்க விரும்பல்ல.... ஆனாலும் ஒன்றுமட்டும் சொல்ல விரும்புறன் எனக்கென்னவோ இந்தப் போராட்டம் தோற்றுப் போகும் போல இருக்குது. இலங்கை அரசோட மட்டுமல்ல எத்தனையோ வெளிநாடுகளோடையும் நாம சண்டைபிடிக்க வேணும். அதுமட்டுமல்ல உங்களோட இருக்கிற துரோகிகளையும் இனங்காண வேணும். அநியாயமாய் அவன் உம்மைச் சுட்டுவிட்டுப் போறான். இந்தப் போராட்டம் வாழ்வதற்கான போராட்டமே தவிர, சாவதற்காக அல்ல. இது ஏன் அவங்களுக்கு விளங்குதில்ல...?

குமாரின் பேச்சு முடிவடைய முன்னரே பவானி அவனைக் கட்டிப்பிடித்து அழுதாள்..... அவன் தண்ணி..... தண்ணி என்று கேட்டுக் கொண்டு அவர்கள் முகத்தைப் பார்த்தான். ஒரு 'டம்ளரில்' தண்ணீரை எடுத்து குமார் அவனுக்குக் கொடுக்கப் போனான். உடனடியாக அதனைப் பறித்தெடுத்த பவானி சுரேஷின் தலையைத் தனது மடியில் தூக்கி வைத்து மெதுவாக தண்ணீரைப் பருக்கினாள். அவனுடைய முகத்தில் பிரகாசம் தெரிய ஆரம்பித்த போது உடல் குளிர்ந்து கொண்டு போவதை அவள் உணர்ந்தாள். அவர்களால் இன்னுமொரு முறை ஒப்பாரி வைக்கவே முடிந்தது.

நிழலை விலக்க முடியாத போது
தோற்றுப் போன போர் வீரன்
பாதுகாப்பில்லாத வெளியில்
தனித்து விடப்பட்டதாக உணர்ந்தான்....
மூடியிருந்த கதவுகள்
அவனை அச்சமடையச் செய்தன...
திறந்திருந்த கதவுகளும்
அபாயமாகவே தோன்றின.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய "சேட்" பையிலிருந்து வெளியே விழும் நிலையில் இருந்த ஒரு "மணிபேசை" எடுத்து விரித்துப் பார்த்தாள் பவானி. உள்ளே அவனுடைய இயக்க அடையாள அட்டை இருந்தது. அதனுடன் இன்னுமொரு போட்டோவும் இருந்தது. அது அவளுடையது.

அவனுடைய உடலை அப்படியே விட்டுவிட்டு, அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வதற்காக ஏரியை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். கையிலிருந்த பொருட்களின் சுமை குறைந்திருந்த போதும் மனதில் துயரச் சுமை கூடிக்கொண்டே போனது. சுற்றிய துணியுடன் குழந்தையை மார்பில் அணைத்தபடி பவானியும், அவளைத் தொடர்ந்து, உமாவைத் தோளில் வைத்தபடி குமாரும் சனங்களோடு சேர்ந்து ஏரியைக் கடக்க ஆரம்பித்தார்கள். கழுத்தளவு தண்ணீரைக் கொண்டிருந்த அந்த ஏரி கடும் நிறமாகக் காணப்பட்டது. வழமையான பார்வைக்கு தெளிவாகத் தெரியும் அது இருளில் அவ்வாறு தெரிந்ததா, அல்லது காயப்பட்ட சனங்கள் போனதால் இரத்தம் கலந்து அவ்வாறு மாறியதா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. அவ்வேளையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளிச்சக் குண்டுகள் அடிக்கடி ஏவப்பட்டுக் கொண்டிருந்தன. மக்கள் மனதில் அச்ச உணர்வு உச்சக் கட்டத்திலிருந்தது.

ஏரியின் நடுப்பகுதியை அவர்கள் கடந்து கொண்டிருந்த போதுதான் அந்த விபரீதம் நடந்தது. திடீரென்று மேற்குக் கரையிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் ஏரியை நோக்கி வந்தன. பலர் ஓலமிட்டுக் கொண்டு ஏரிக்குள் விழுந்தனர். குமாரின் தோளுடன் உரிசியபடி ஒரு துப்பாக்கிரவை போக அவன் நிலை குலைந்து, முன்னே சென்ற பவானியைப் பிடித்தான். பவானியும் அவனும் குழந்தைகளுடன் ஏரியில் விழுந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் அவர்கள் எழுந்திருந்த போது உமா பயத்தினால் அழுது கொண்டிருந்தாள். பிறந்த குழந்தையைத் துணியில் சுற்றியபடி அப்படியே கரையை அடைந்தார்கள். கரையில் துணியை விலக்கிப் பார்த்த போது அக் குழந்தையைத் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டிய அவசியமிருக்கவில்லை.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்த போதும், விடிவெள்ளி ஒன்றுகூட வானில் தென்படவில்லை. சில்லென்ற குளிர்ந்த கடல் காற்று பனித்தூறல்களை ஊடறுத்து வீசிக்கொண்டிருந்தது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இடையிடையே ஏவப்படும் வெளிச்சக் குண்டுகள் மக்களுக்குப் பேருதவியாக இருந்தன. அவர்களின் இடப்பெயர்வுக்கும், கரையேறி யவர்கள் ஒன்றாகச் சேர்ந்திருப்பதற்கும் அவ்வெளிச்சம் பெரிதும் உதவியது. குமாரும் பவானியும் சனங்க ளோடு வந்து ஒரு இடத்தில் அமர்ந்தனர். உமா குமாரின் மடியில் கண்களை மூடியபடி படுத்திருந்தாள். பவானி தொடர்ந்து அழுது கொண்டே இருந்தாள். பழைய துன்பமான நிகழ்வு களுடன், தவறிப்போன குழந்தையும் சுரேஷின் மரணமும் புதிதாகச் சேர்ந்து கொண்டமை அதற்குக் காரணமாக இருந்தன. சட்டைப் பையில் கையைவிட்டு அந்தத் துண்டுக் காகிதத்தைத் தேடினான் குமார். அது அங்கு காணப்பட வில்லை. '....வாழ்வையே போராட்டமாகக் கொண்டு வாழ்கின்ற மனிதன்....' அந்த நேரத்திலும் அவனுடைய வாய் முணுமுணுத்தது.

விடுவிக்கப்படாத பிரதேசத்தில் அழிந்து போனவர்களைத், தவிர உயிர் பிழைத்தோர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இலட்சக் கணக்கில் சரணடைந்து கொண்டிருந்தனர். கூட்டம் கூட்டமாகச் சேர்ந்திருந்த அவர்களுக்கு, பல மணிநேரங் கடந்தும் கூட, கண்ணுக்கெட்டிய தூரம் வரை இராணுவத்தினர் ஒருவருமே தென்படவில்லை. அது அவர்களின் பய உணர்வை மேலும் அதிகரிக்கச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகுரல் சத்தங்களும் அவலங்களும் நிறைந்திருந்த வன்னியின் கிழக்குக் கரையிலிருந்து பாடசாலைக்கு விருப்பமின்றிப் போகும் பள்ளிச் சிறுவன் போல் சூரியன் மெதுமெதுவாக வெளிவந்து கொண்டிருந்தான். ஏரியிலிருந்து கரை யேறியவர்களின் ஈர உடைகள் அவரவர் உடற் சூட்டிலேயே உலர்ந்தி ருந்தன. காலைக் கடன்களைக் கழிக்க முடியாத நிலையிலும், வறண்டு போன நாவுடனும் அடுத்து நடக்கப் போவதை எண்ணியபடி பீதியுடன் மக்கள் இராணுவ முகாமையே கண்ணிமைக்காது பார்த்தபடி இருந்தனர். அப்போது முகாமிருந்த திசையிலிருந்து ஒரு தொகைச் சிப்பாய்கள் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

சற்றுத் தூரத்தில் அவர்கள் ஒரு இடத்தில் நின்று கொண்டிருக்க, அவர்களில் ஒருவன் கையை அசைத்து அனைவரையும் வரிசையாக வரும்படி சத்தமிட்டான். அவ்வாறு வந்தவர்களை மறுபுறம் நிறுத்திவைக்கப் பட்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகளில் ஏறும்படி கட்டளை இடப்பட்டது. 'பஸ்'கள் நிரம்பி வழியுமளவிற்கு அவற்றில் சனங்கள் ஏறினார்கள். குமாரும் உமாவைத் தூக்கிக் கொண்டு ஒரு பஸ்ஸில் ஏற அவனைத் தொடர்ந்து பவானியும் ஏறினாள். சிறிது நேரத்தில் அவை பயணத்தை ஆரம்பித்தன.

ஒரு மணி நேரத்திற்குக் கூடுதலாகத் தொடர்ச்சியாக ஓடிக் கொண்டிருந்த அவை ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டன. இராணுவத்தினர் சிலர் வாகனங்களிலிருந்து இறங்கியபடி அங்கே நின்ற மற்றைய இராணுவத்தினருடன் கதைத்துக் கொண்டு உஷாராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தனர். இடிபாடுகளுடன் கூடிய அந்த இடம் 'வள்ளிபுரம்' என்பதைக் குமார் அடையாளம் கண்டு கொண்டான். சிறிது நேர இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியின் பின்னர் வாகனத் தொடரணி மீண்டும் புறப்பட்டு கிளிநொச்சி நகரை அடைந்தது. பஸ் வண்டிகள் அனைத்தும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்தப்பட்டன.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அவர்கள் கீழே இறங்க அனுமதிக்கப் பட்டார்கள். வைத்தியசாலைக்குச் சொந்தமான கட்டிடங்கள் பலவும் நடைபெற்ற சண்டையினால் அழிந்து போயிருக்குமென நினைத்த அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. வைத்தியசாலைக் கட்டிடங்கள் பலவும் பெரும் சேதங்களின்றி அப்படியே இருந்தன. அந்த இடத்தில் பலர் தங்கள் காலைக் கடன்களை முடித்தனர். இன்னும் சிலர் கிணற்று நீரில் தாகத்தைத் தணித்துக் கொண்டனர். கிணற்று நீர் நஞ்சாயிருக்குமென்று யாரோ வதந்தியைக் கிளப்பிவிட, தாகத்துடன் இருந்த பலர் கிணறு இருந்த திசைக்குக் கூடச் செல்லாமல் இருந்தனர். ஆனாலும் அவ்விடத்திற்குப் போன குமார் வைத்தியசாலையை பார்த்து ஒரு நெடுமூச்சை விட்டான். அவனுக்கு பழைய ஞாபகங்கள் வரத் தொடங்கின.

“.... சாரதாவைப் பிள்ளைப் பெறுவுக்காக வைத்திய சாலையில் சேர்த்திருந்தான் குமார். திருமணம் முடித்தபின்னர் அவளைப் பிரிந்து அவன் ஒரு நாள் கூட தனியாக இரவைக் கழித்ததில்லை. அன்றைய இரவு அவனுக்கு குழப்பமான தொன்றாக இருந்தது. நேரம் நத்தையுடன் போட்டி போட்டுக் கொண்டு ஓடியது. வெளியே முற்றத்தில் குட்டிபோட்ட பூனையைப்போல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான் அவன். யன்னலினூடாக சிறிது நேரம் அவனைப் பார்த்துக் கொண்டிருந்த முருகேசர் ஒரு நமட்டுச் சிரிப்புடன் படுக்கைக்குச் சென்றுவிட்டார்.

அரைகுறையாக விடிந்து கொண்டிருந்த போதே அவன் ஆஸ்பத்திரியை அடைந்துவிட்டான். உள்ளே போய்ப் பார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பிரசவம் முடிந்து அவளுக்குப் பக்கத்தில் ஒரு அழகான பெண் குழந்தை படுக்கையில் இருந்தது. சாரதா கண்களை மூடியபடி களையில் படுத்திருந்தாள். அவளுடைய உடல் அதிகாலை வேளையிலும் வியர்த்திருந்தது. துவாயை எடுத்து மெதுவாக அவள் முகத்தை துடைத்துவிட்டான். அந்த விடுதியில் மின் விசிறிகள் இரண்டு மட்டுமே சுழன்று கொண்டிருந்தன. இன்னும் இரண்டு மின் விசிறிகளுக்கு உரிய இடம் வெறுமை யாக இருந்தது.

வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபையை அவன் உடனேயே தொடர்பு கொண்டான். பிரசவ விடுதியின் குறைபாடுகள் சிலவற்றிற்கு பொதுமக்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்டது. அவ்வேளையில் வைத்தியசாலைக்குத் தேவையான இரண்டு மின் விசிறிகள் அவனால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. வவுனியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கு மிடையே வாழ்ந்த பல இலட்சம் மக்களின் வாழ்வாதாரமாக அந்த ஆஸ்பத்திரி விளங்கியது. வைத்தியர்களும் மற்றைய ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி பலரின் உயிர்களைக் காப்பாற்றக் காரணமாயிருந்த அந்த ஆஸ்பத்திரி இப்போது நோயாளிகளோ, ஊழியர்களோ யாருமின்றி வெறிச் சோடிப்போய்க் கிடந்தது..."

பழைய ஞாபகங்களில் இருந்து அவன் மீண்ட சிறிது நேர இடைவெளியின் பின்னர் இராணுவத்தின் கட்டளைக் கிணங்கி, அவர்கள் அனைவரும் பஸ்களில் ஏற அவை மீண்டும் புறப்பட்டுச் சென்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையின் இரு புறமும் பெருமளவில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். கனரக வாகனங்களுடன் ஏனைய வாகனங்கள் பலவும் கணக்கில்லாமல் காணப்பட்டன. இரு நாடுகளின் எல்லைப்புறச் சண்டையில் தாங்களும் வந்து சிக்கிவிட்டதாகவே பலரும் நினைத்தனர். ஆனாலும் வழியில் எந்த ஒரு இடத்திலும் இராணுவத்தினரால் இவர்கள் பயணித்த வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்படவில்லை. இருள் சூழ்ந்த காட்டு வழிகளால் பஸ் வண்டிகள் ஓடிக் கொண்டே இருந்தன. மக்கள் அனைவரும் கண்களை மூடியபடி பயணித்துக் கொண்டிருந்தார்கள். பயத்தினாலா அல்லது களையினாலா அவ்விதம் அவர்கள் பயணம் செய்தார்க ளென்பதற்குக் காரணத்தைக் கண்டறிய முடியவில்லை. சிறிது நேரப் பயணத்திற்கு பின்னர் மெதுவாகக் கண்களைத் திறந்து வெளியில் பார்த்த பவானி குமாரின் காதுக்குள் சொன்னாள் '......அண்ணா இது வவுனியாவிற்குப் போகும் பாதை.....'

நேரம் சரியாகத் தெரியாத போதும், நடுநிசியைத் தாண்டி விட்டதால் விடிவதற்கு இன்னும் சில மணிகளே இருக்க வேண்டும் பஸ் வண்டிகள் அனைத்தும் ஒரு வெட்ட வெளியில் நிறுத்தப்பட்டன. வண்டியிலிருக்கும் அனைவரையும் இறங்கி வரிசையில் வரும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எல்லோரும் மறுபிறவி எடுப்பதற்காக கையில் தங்கள் அடையாள அட்டையுடன் ஒருவர் பின் ஒருவராகச் சென்று கொண்டிருந்தனர். அவர்களைப் பொறுத்தவரை உயிர் பிழைப்பதற்கான ஒரு விஷப் பரீட்சையாகவே இது இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரும் பவானியும் அடையாள அட்டையுடன் இராணுவத்தினரை அண்மித்தபோது அவர்களுடன் சிலர் சாதாரண உடையுடன் நிற்பதை அவதானித்தனர். அந்தச் சிலரில் சுரேஷைச் சுட்டு வீழ்த்தியவனும் நின்றான். பவானி ஆத்திரத்தையும் அழுகையையும் ஒருவாறு அடக்கிக் கொண்டு குமாரின் முகத்தைப் பார்த்தாள். அவனுடைய முகத்தில் எதுவித பிரதிபலிப்பையும் காணவில்லை. அவன் எப்போதோ நடைபிணமாக மாறிவிட்டிருந்தான். சோதனைச்சாவடியில் அசம்பாவிதங்கள் எதுவும் நடக்கவில்லை. அவன் இவர்களை அடையாளம் கண்டிருக்க வாய்ப்பு இல்லாமல் இருந்திருக்க வேண்டும். எதுவித கவலைகளுமற்றவனாக அவன் இராணுவத்தினருடன் கதைத்துக் கொண்டிருந்தான்.

மக்களைப் பிரித்துப் பிரித்து, ஏற்கனவே அமைக்கப் பட்டிருந்த கூடாரங்களில் தங்கும்படி அறிவுறுத்திய இராணு வத்தினர், அவர்கள் கொண்டு வந்திருந்த பொருட்களையும் எடுத்துச் செல்ல அனுமதித்தனர். ஒரே குடும்பத்தினர், உறவினர்கள், ஊரவர்கள் எனக் கருதப்பட்ட பலரும் வெவ்வேறு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். இவற்றை அவ்வேளையில் எடுத்துச் சொல்ல யாருக்கும் தைரியம் வரவுமில்லை. குமாரும் பவானியும் இராமநாதன் முகாமுக்கு அனுப்பப்பட்டனர். அங்கே அவர்களுக்கு மாற்று உடைகளும், சமைத்த உணவும் வழங்கப்பட்டது.

இரண்டு மாத கால அகதி வாழ்க்கை முகாம்களிலேயே கழிந்துவிட்ட நிலையில் மக்கள் பலரும் இந்த அவல வாழ்விற்கு முடிவு வராதா என அங்கலாய்க்கத் தொடங்கினர். கொடிய வெப்பமும், வரட்சியான காற்றும் அவர்களை உயிருடன் வாட்டி வதைத்தது. தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித் தாடியதால் ஒழுங்காக உடைகளைத் தோய்த்து அவர்களால் குளிக்கவும் முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொற்று நோய்களுக்கு வழியேற்படுத்தியதுடன், பல சுகாதாரச் சீர்கேடுகளையும் விளைவித்தது. இந்த நிலையில் மக்கள் பலரும் தங்கள் இழந்து போன, அல்லது தொலைந்து போன உறவுகளை மறக்க முடியாதவர்களாக நினைத்து நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டேயிருந்தனர்.

இப்படியிருக்கையில் ஒருநாள் பவானியின் தோழியான சுகிர்தா அவளைத் தேடி வந்தாள். அவளைக் கண்டதும் பவானி தங்கள் குடும்பக் கதையைச் சொன்னாள். பல இடங் களில் தனது அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள் கஷ்டப்பட்டதைக் கண்ட சுகிர்தா பேச்சைத் தொடர்ந்தாள்.

"...... பவானி அழாதேயும்.... முகாம்களில் இருப்பவர்கள் ஒருவரும் இப்போது சிரிக்கமாட்டார்கள். அப்படிச் சிரித்தால் அவர்களுக்கு புத்திசுவாதீனமாக இருக்கும் நானும் இராமநாதன் முகாமில் தான் அம்மாவுடன் இருக்கிறேன்... அப்பாவும் இரண்டு தம்பிமாரும் வரும் வழியில் தவறிப் போனார்கள்.... நாங்கள் தேடாத இடமில்லை.... கண்ணீர்விடாத நாட்களும் இல்லை.... ஆனால் அதால எந்தப் பிரயோசனமும் இல்லை... இப்போது எங்கள் குடும்பத்தில உமாவின் வயதை ஒத்த இன்னுமொரு புது உறவு வந்திருக்கு.... அம்மாவையும் அப்பாவையும் இழந்த அவனை நாங்கள் தான் வைத்துப் பராமரிக்கின்றோம். எட்டு வயதாகியும் அவனுக்கு சரியான செல்லம்.... தன்னுடைய வேலைகளைக் கூட ஒழுங்காகச் செய்யமாட்டான்.... உங்களுடைய உமா எப்படி குழப்படியா....?

சுகிர்தா பேச்சை முடிக்க முன்னர் பவானியின் மடியில் இருந்த உமா உடனடியாக பதில் சொன்னாள்.

"அன்ரி நான் ஏன் வேலை செய்ய வேணும்... எனக்குத்தான் பவானி மாமி இருக்கிறா.... நான் எப்போதும் அவ கூடவே இருப்பேன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த பேச்சைத் தொடர விரும்பாத பவானி, சுகிர்தாவுக்கு கண்களால் சைகை செய்து கவனத்தை வேறு திசைக்கு மாற்றினாள். சிறிது நேரத்தின் பின்னர் சுகிர்தா போய்விட்டாள்.

இரண்டு நாட்கள் கழிந்த நிலையில் குமார் குளிப்பதற்காக குழாயடிக்குச் சென்றிருந்தான். பவானியுடன் இருந்த உமா பேசத் தொடங்கினாள்.

“..... மாமி... நேற்று நீங்க குளிக்கப் போன பிறகு அப்பா வெகு நேரமாக அழுது கொண்டிருந்தவர்.... உங்களைக் கரைச்சல்படுத்தக் கூடாது என்றும் எனக்குச் சொன்னவர்.... சில மாதங்களில் மாமி வேற இடத்திற்குப் போயிருவா..... பிறகு நீயும் நானும் தான் ஊருக்குப் போய் இருக்க வேணும் என்று சொன்னவர்.... ஏன் மாமி நீங்க எங்களைவிட்டு எங்க போகப் போறீங்க....?

“ அப்பா பாவம் உமா..... அவரை விட்டு விட்டு அம்மா போன பயத்தில அவர் அப்படிச் சொல்லியிருப்பார்.... நான் உங்கள இரண்டுபேரையும் விட்டுவிட்டு ஒரு இடமும் போக மாட்டன். நீ இதைப்பற்றி அப்பாவிடமும் சொல்ல வேணாம்.... வாங்க இப்ப நாம தேத்தண்ணி குடிப்பம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தன் கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தான். பாடசாலைக்குப் போகாமல் ஒரு வாரகாலமாக விடுமுறையில் வீட்டிலிருந்ததனால் அவனைப் பார்ப்பதற்காகவென உறவினர் களுடன் அவனுடைய நண்பர்களும் வந்து போய்க் கொண்டிருந்தனர். வந்தவர்களிடமெல்லாம் மணியத்தார் தனது அரசியல் ஆருடங்களை முன்வைக்கத் தவறவில்லை. அன்றைய தினம் அவருடைய ஆத்ம நண்பர் அருளம்பலத்தார் நாள் முழுவதும் அவர்கள் வீட்டிலேயே தங்கியிருந்து பத்தும் பலதும் கதைத்துக் கொண்டிருந்தார்.

'........ இதக் கேளும் மணியம்..... சும்மா அரசியல் அரசியலெண்டு கதைச்சுக் காலத்தக் கடத்தாம மகனுடைய எதிர்கால வாழ்க்கையைப் பற்றியும் யோசியும். அவனையும் கால காலத்தில கட்டிக் கொடுத்திட்டா உம்முட பாரம் குறையும்.....'

'ஹா..... ஹா..... ஹா......' என்று பெரிய நகைச்சுவை ஒன்றை கேட்டவரைப் போல் சிரித்த மணியத்தார் தொடர்ந்தார்.

அதிலபாரும்..... அருளம்பலம்... யாருக்கும் யாரும் பாரமில்ல....... ஒவ்வொருவரும் அவரவர் சொந்தக் காலில நிக்கப் பழக வேணும்......

'....... அங்கிள்.... அவருக்கு நீங்கள் என்ன சொன்னாலும் விளங்காது.... அவர் அதக் கேட்கப் போறது இல்ல...... இந்த இயக்கக் காறங்கள் விட்ட பெரும் பிழ தங்கட சொந்தக்காலில கடைசிவரை நிக்கல....... அதே பிழயத்தான் இப்ப நானும் விடுறன் எண்டு நினைக்கிறன்.... இனி அத மாத்த வேணும்......'

கதை வேறு பாதைக்குத் திசை திரும்புவதைப் பார்த்த அருளம்பலத்தார் நிலைமையை சுமுகமாக்குவதற்கு எழும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியைப் போட்டார். இலங்கை ரூபவாஹினியில் ஜனாதிபதி கையை அசைத்தபடி உரையாற்றிக் கொண்டிருந் தார். உடனே அதை நிறுத்தப் போன அவரிடம் அதனை சண் ரீ.வி. க்கு மாற்றச் சொல்லிவிட்டு நேரத்தைக் காட்டினார் மணியத்தார். செய்தி சொல்வதற்கான நேரம் அண்மித்துக் கொண்டிருந்தது.

'...... சண் செய்திகள்..... வாசிப்பவர் வாணி ஜெயச்சந்திரன்...... முதலில் தலைப்புச் செய்திகள்......'

.... இந்திய அரசின் பிரதிநிதிகள் இலங்கை சென்றுள்ளனர். இதில் மத்திய அமைச்சர்களுடன், தமிழக அமைச்சர்களும் அடங்குகின்றனர். இவர்கள் அந்நாட்டு அரச அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியான யுத்த நிறுத்தத்திற்கும், அகதிகள் புனர்வாழ்விற்கும் ஏற்பாடு செய்துள்ளனர். அகதிகளை 180 நாட்களுக்குள் சொந்த இடங்களில் குடியமர்த்தவும், முகாமிலுள்ளோர் வெளியில் சென்று உறவினர்களைச் சந்திக்கவும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அந்நாட்டு அதிபர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.....

'......... நான் முன்னமே சொன்னதுதானே அருளம்பலம் இவங்கட விருப்பத்துக்கு ஒண்டும் செய்ய ஏலாதெண்டு..... அதற்கு இந்தியா விடாது.....'

'..... ஓமோம்..... கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்னத்துக்கு......?' எரிச்சலுடன் படுக்கையை விட்டு எழும்பிய ஆனந்தன் குளியலறையை நோக்கிப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களுக்குள் இலங்கை அரசு அந்த அறிவித்தலை வெளியிட்டது. முகாமிலுள்ளவர்கள் தங்கள் தேவைகளுக்காக வெளியில் போய்வரத் தொடங்கினார்கள். தாம் திறந்த வெளிச் சிறைச்சாலையிலிருந்ததாக உணர்ந்தவர்கள் பலரும் உறவினர்களின் வீடுகளுக்கும், கடைகளுக்கும் கூடப் போய் வந்தார்கள். குமாரும் வவுனியா நகருக்குப் போய் பொருட்கள் வாங்கி வந்தான். பவானி முகாமிலிருப்பதை வெளியில் காட்டிக் கொள்ள விரும்பாதவளாகவே இருந்தாள். வவுனியாவில் தான் படிப்பித்த பாடசாலையுடன் தொடர்புடைய ஒருவரும் தன்னைச் சந்திப்பதை அவள் விரும்பவில்லை. முக்கியமாக ஆனந்தன் எப்போதாவது தன்னைத் தேடிவருவான் என அவள் எதிர்பார்த்தாள்.

அவள் எதிர்பார்த்ததுபோலவே அந்த நிகழ்வும் நடந்தது. வவுனியாவிலிருந்து ஆனந்தன் என்னும் ஆசிரியர் அவர்களைப் பார்க்க விரும்பும் செய்தி குமாருக்கு அறிவிக்கப்பட்டது. பவானி அவ்வழைப்பை ஏற்க விரும்பாதது கண்டு அவன் ஆச்சரியமடைந்தான். அவன் அவளுடன் அது விடயமாகப் பேச்சைத் தொடர விரும்பவில்லை. அவர்களிருவரும் நேரில் சந்தித்துக் கதைத்தால் அவர்களிடையே விடுபட்ட தொடர்பு ஏற்பட வாய்ப்பேற்படும் என அவன் நம்பினான். உமாவையும் கூட்டிச் சென்று ஒரு தரம் ஆனந்தனைச் சந்தித்துவிட்டு வரும்படி குமார் பவானியைக் கேட்டுக் கொண்டான். குமாரின் விருப்பத்தை பவானியால் நிராகரிக்க முடியவில்லை. அவள் குழம்பிய மனதுடன் முகாமுக்கு வெளியே காத்திருக்கும் ஆனந்தனைச் சந்திக்க உமாவுடன் கிளம்பிப் போனாள்.

◈◈◈◈◈



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தனுக்குத் தனது கண்களை நம்பவே முடியவில்லை. அவனுக்காகவே மறு பிறப்பெடுத்திருக்கும் பவானி அவனை நோக்கி ஓடிவருவதாக அவன் உணர்ந்தான். அவளுடைய காந்தக் கண்களுக்கு முன்னால் அவனுடைய பார்வை மங்கிப் போயிற்று. அவனை நோக்கி ஓடிவந்த அவள் அங்கு மற்றவர்கள் இருப்பதையும் கவனிக்காது, அவர்கள் முன்னிலையிலேயே முகத்தை அவனுடைய மார்புக்குள் அடக்கிக் கொள்கிறாள். சிறிது நேர மௌனத்தை உடைத்து அவன்தான் முதலில் பேசினான்.

என்னை மன்னித்துவிடு பவானி.... என்னால் தான் உமக்கு இவ்வளவு கஷ்டம்....

அவன் பேசி முடிக்கவில்லை அவனுடைய இறுக்கமான பிடியிலிருந்து உமா விடுபட முயற்சித்துக் கொண்டிருந்தாள்..

நான் பவானி மாமி இல்ல.... அங்கிள்.... நான் உமா.....
மாமி அதோ அங்க நிக்கிறா......

அவள் கை காட்டிய திசைக்கு அவனுடைய பார்வை செல்கிறது. அங்கே பவானி குனிந்த தலையுடன் நின்று கொண்டிருந்தாள். அவளும் ஆனந்தனின் தோற்றத்தைக் கண்டவுடன் நிலை குலைந்து போனாள்.

'என்னை மன்னித்துவிடம்மா..... துன்பங்களை அனுபவிச்ச நீங்களெல்லாம் சுய அறிவோட இருக்கிறீங்க... கட்டுப்பாட்டுப் பகுதியில இருந்த நாங்கதான் அறிவு கெட்டுப் போனம்.....'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்ன விஷயமா எங்களைப் பார்க்க விரும்பின நீங்க..... கெதியாய் சொல்லுங்க.... நாங்கள் போக வேணும், நான் சமைக்க வேணும்.....*

பவானி தயவு செய்து நான் சொல்லுறத கேளும்..... முகாமவிட்டு நாளைக்கே நீங்க எல்லாரும் என்னோட வாங்க.... வெளியில இருக்கலாம்.... இந்த அகதி வாழ்க்கைக்கு முடிவுகட்டலாம்....

*வெளியில நாங்க யார் வீட்டில இருக்கிறது....? அங்கே இன்னொருவரில் தங்கி வாழும் வாழ்க்கையை இங்க வாழ்ந்திட்டுப் போவம்...*

அப்படிச் சொல்லாதேயும் பவானி.... ஐயாவின்ர கதையக் கேட்டு உம்ம நான் கொஞ்சக் காலம் பொறுக்கச் சொன்னது பழய கதை, அதையெல்லாம் இப்ப மறந்துவிடும். ஐயா தன் தவறையெல்லாம் உணர்ந்து இப்ப நம்மளச் சேர்த்து வைக்கிறதுக்கு மனப்பூர்வமா விரும்புகிறார். வயசான காலத்தில அவருடைய விருப்பத்த நிறைவேற்ற உதவுங்க பவானி... ப்ளிஸ்.... நீங்களும் வாழ்க்கையில ஒருநாளும் கண்டிராத துன்பத்தையெல்லாம் அனுபவிச்சிற்றீங்க.... இனிமேலாயினும் நாம நல்லா இருக்க வேணும்.....

*ஆனந்தன் சேர்... நீங்க எப்பவும் உங்களப் பற்றியும் உங்கட ஐயாவைப் பற்றியும் மட்டுமே யோசிக்கிறிங்க... காதல் இரண்டு மனசுகள் சம்பந்தப்பட்ட விஷயம் அந்த மனசுகள புற அழுத்தத்தால சேர்த்து வைக்க நினைக்கிறதோ அல்லது பிரிக்க முயற்சிக்கிறதோ ஒருபோதும் வெற்றியளிக்காது. அதுபோல, இன்னொருவர் படுற துன்பத்தைப் பார்த்து வாறதும் காதல் இல்ல...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வெறும் அனுதாபம் மட்டுமே... நான் எங்கட வீட்டு நிலைவரத்தக் கருத்தில் கொண்டு இப்போதைக்கு திருமணம் செய்யிறதா இல்ல.... நான் திருமணம் செய்ய ஆயத்தமாக உங்களிடம் வந்த போது உங்கள் வீட்டில் வசதியில்லை... நீங்க திருமணம் செய்ய ஆயத்தமாய் இங்க வந்த போது எங்களுக்கு சொந்த வீடும் இல்லை வசதியுமில்லை.... நம் காதலுக்கு வந்த சோதனையைப் பாருங்கள்.... உங்களுக்கு விருப்பம் என்றால் இன்னும் கொஞ்சக் காலம் பொறுக்க வேணும். அதற்குப் பிறகு அந்தக்காலம் ஒரு வேளை நம்மைச் சேர்த்து வைக்கும். அதுவரைக்கும் நாங்கள் தனித்தனியாக இருப்போம்.

இல்ல... பவானி..... உங்க வீட்டிலயும் இது ஒப்புக் கொள்ளமாட்டாங்க.... நான் உங்கட அண்ணன், அண்ணியோட ஒரு தரம் கதைக்கிறன்.....

அண்ணியும், அப்பாவும் ஆயிரக்கணக்கானவர்களோட அந்த உலகம் போயிற்றாங்க.... உங்களுக்கெல்லாம் அந்தச் செய்திகள் தெரியவாய்ப்பில்ல... முல்லைத்தீவிலயும், கிளிநொச்சியிலயும் இருந்த மக்கள் முகத்தில இனி உண்மையான சிரிப்பைப் பார்க்க வேணுமென்டா இன்னுமொரு புதிய தலைமுறை உருவாகவேணும்... அது எட்டு வயதான உமாவுக்குப் பிறகு வளர்ந்துவாற பிள்ளைகளாலதான் முடியும்..... அதுவரை எங்களால சிரிக்க முடியாது. எங்கட மனசிலெல்லாம் அநியாயச் சாவுக்குள்ளான எங்கட உடன் பிறப்புக்கள் தான் எப்பவும் இருப்பாங்க... இப்போதைக்கு அவசரம் என்றால் நீங்கள் இன்னுமொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். எனக்கு அதில் ஆட்சேபனை இல்லை. தயவு செய்து என்னை மன்னிசிடுங்க..... என்னுடைய முடிவ நான் மாத்திக்கிறதா இல்ல......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்ல.... பவானி இல்ல..... ப்ளீஸ்... நான் சொல்லுறதக் கொஞ்சம் கேளுங்க..... என்னுடைய வாழ்க்கையில இனி நான் இன்னுமொரு பெண்ண நினைச்சுப் பார்க்கிறது நடக்க முடியாததொன்று.... உம்முடைய முடிவில்தான் நம்முடைய இரண்டு பேருடைய எதிர்காலமும் தங்கி இருக்குது.

*அப்படிச் சொல்லாதீங்க ஆனந்தன் சேர்.... நாங்க நிகழ்காலத்த மட்டுமல்ல... எதிர்காலத்தையும் தொலைத்துவிட்டு நிக்கிறவங்க... எங்களோட உங்களையும் ஒப்பிடாதங்க... எங்கட பிரதேசத்தில குறைந்தபட்சம் ஆறுமாதமா இலட்சக் கணக்கான நாங்க அடிபாடுகளுக்குள்ள சிக்கி அகதிகளாக அல்லற்பட்டுக் கொண்டிருந்த போது வடக்குக் கிழக்கு உட்பட நாட்டில் எல்லா இடமும் நீங்க விழாக்களையும் கொண்டாட்டங்களையும் நடத்திக் கொண்டுதான் இருந்தீங்க.... ஏன் வவுனியாவில் கூட என்ன நடந்தது.....? எங்களுக்குகாகச் சில நல்ல உள்ளங்கள் கண்ணீர் விட்டிருக்கலாம்.... ஆனா பெரிசா யாரும் எதுவும் செய்யல்ல.... தனியொருத்தியான எனக்காக உங்க எதிர்கால வாழ்வையே அழிச்சுக் கொள்ளப் போவதாகச் சொல்லும் நீங்க ஆயிரக் கணக்கான மக்கள் அழிஞ்சு போன போது எங்கே போனீங்க..... பிரதேசம்... இனம்.... மொழி.... காதல்.... எல்லாம் எங்களுக்கு முன்னால் வெறும் பொய்யான வார்த்தைகளாகப் போச்சு....*

அவள் பேச்சை நிறுத்திய போது பார்வையாளர்கள் பார்வையிடும் நேரம் முடிவடைந்து, இராணுவ வீரர்கள் வெளியாட்களை அப்புறப்படுத்த தொடங்கியிருந்தார்கள்.

பவானி.... இறுதியாக எனக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆனந்தன் சேர்... என்னுடைய முடிவில் நான் உறுதியாக இருக்கிறேன். இப்போது நாங்கள் அனைத்தையும் இழந்து அகதி முகாமில் இருந்தாலும் சாம்பல் பறவைகளாக மீண்டும் உயிர்த்தெழுவோம். அப்போது நமது காதலும் நிறைவேறும், அதுவரை நீங்கள் காத்திருந்தால். இப்போதைக்கு என்னால் இவ்வளவுதான் சொல்ல முடியும். இனி எல்லாம் உங்கள் கைகளில்....*

அவள் பேச்சை முடித்துக் கொண்டு கலங்கிய கண்களுடன் உமாவைக் கைகளில் பிடித்துக்கொண்டு முகாமிருந்த பக்கம் போக ஆரம்பித்தாள். ஆனந்தனை நோக்கி ஒரு இராணுவ வீரன் சத்தமிட்டான். அவனுடைய கால்கள் தள்ளாடியபடி வெளிவீதியை நோக்கி நடக்கத் தொடங்கின.. உதடுகள் பவானி.... பவானி... என்று உச்சரித்துக் கொண்டிருந்தன.

◈◈◈◈◈



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களுக்கும் நன்றிகள்...

உன்னதமானவர்கள் வீழ்ந்து விட்டனர்......
பி.என்.பிக்னரின் கவிதை

மீனினம் பெருகி நிதம்...... தீட்சண்யம்
- எஸ்.ரீ.பிறேமராஜன்

ஆசிரியர்கள்..... தீட்சண்யம்
- எஸ்.ரீ.பிறேமராஜன்

நிழலை விலக்க முடியாத போது
கவிஞர் கருணாகரன் (2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னி மக்களின் உண்மையான உழைப்பும்

அவர் தம் போராட்டமும்

வெறும் சாம்பலாகாமல் கோரைப் புல்லாக

மீண்டும் மீண்டும்

முளைத்து எதிர்கால சந்ததியினருக்கு

சாட்சி பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்ற பேரவாவை

குறு நாவல் மூலம் பூர்த்தி செய்தமை பாராட்டத்தக்கதாகும்.

மேலும், பிரச்சினையை ஒரு பக்கமாய்ப் பார்க்காமல்

ஒரு நாணயத்தின் இரு பக்கங்களையும் பார்க்கின்ற போக்கு

இவரிடம் வளர்ந்து செல்வதனை இக் குறுநாவலைப்

படிக்கின்றபோது புரிந்துகொள்வீர்கள் என நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org